15. விலை 2 அணா REGD. NO. 4

திராவிடநாடு

ர் 12 | 23—5—54 | இதழ் 47

தி. மு. க. தியாகமணிகாள்!

வென்றோம் நாம்!

அறப்போரின் வெற்றி! ஆணவத்தின் வீழ்ச்சி!

சிந்திய இரத்தம்
வீண் போகாது;

தாங்கிய தடியடி
வியர்த்தமாகாது.

சிறை வாழ்வு
வெற்றி தரும்,

திரள்வீர்! விழிப்பீர்!
போரிடுவீர்.

என்று சொன்னோம்: இன்று வென்றோம்!

மக்கள் குரல் பீரங்கியினும் பெரிது

அந்த உண்மையை உணரச்செய்யும் வகையில்

ஒழிந்தது புதுக் கல்வித் திட்டம்!

★ அழிந்தது, குலபேதக் 'கொடும்பாவி!' ★

அருமையான பாடம், ஆணவக்காரர்களுக்கு. சரியான அடி தர்பார் சூரர்களுக்கு.

மகிழ்வீர்! போற்றுவீர்! மனங் கலங்கா நமது மாவீரர்களே!

களிப்பீர்! கானம் எழுப்புவீர்! கண்ணியமும் கடமையும் தந்த பரிசெனச் சொல்வீர்!

நாடும், நீங்களும் மகிழ்ச்சி விழா எழுப்புவீர்.

ஆதிபத்யத்துக்கு நாம் தந்த 'முதல் அடி' என்று முரசொலிப்பீர்!

வென்றோம்! வென்றது முன்னேற்ற முன்னணி! வென்றது நாடு!!

பெருமூச்சு விடுகிறோம்!

அரங்கண்ணல்

அருமையான மந்திரிபீடத்தில் அமர்ந்திருக்கிறார், எங்கள் தலைவர். அசூயை தாங்கமுடியவில்லை, இவர்களுக்கு. ஏதேதோ பேசுகிறார்கள்!

வீரர் வீழ்ந்தார்! — என்று எழுதுகிறீர்களே. ஏனய்யா, இந்தப் போக்கு உங்களுக்கு?

எங்களவரில் ஒருவர் மந்திரியானதைக் கேட்க உங்களுக்கு சகிக்க முடியவில்லை. அதனால்தான் பேசுகிறீர்கள்! எழுதுகிறீர்கள்!! அவர் ஏன் மந்திரியானார்? பதவி ஆசையா! அல்ல, அல்ல. எங்களவரில் ஒருவர் மந்திரியாக இருந்தால்தானே, இழிவும் பழியும் சுமந்த எங்கள் சமுகத்துக்சென்று ஏதாவது நன்மைகள் செய்யம்முடியும்.

*

"பதறுகிறார்கள், பாவிகள்! இவர்களுக்கென்னவாம்? அதோ எங்கள் தலைவர், ஆனந்தமாகப் பவனி வருகிறார். பண்டித நேரு, தோள்மேல் கைபோட்டுக்ககாள்ளுகிறார்! பக்கத்திலிருக்கும் காங்கிரஸ் தியாகிகள் எல்லாம் 'சல்யூட்' அடிக்கிறார்கள். ஆகா, கண்கள பூத்துப் போகும் காட்சி! களிப்படைகிறோம், நாம்!! இதனைக் கண்கோண்டு பார்க்கும் மனமில்லாமல், புலி வீழ்ந்தது! சதிக்கு இரையாகிற்று! புண்பட்டோம்! என்றெல்லாம் புலம்புகிறார்கள், இவர்கள். போக்கத்தவாகள. நம் தலைவருக்கேற்பட்ட அந்தஸ்தைக் காண அவர்கள் கண்கள் கூசுகின்றன! அதனால்தான் இப்படியெல்லாம் பேசுகிறாகள்—எழுதுகிறார்கள்.

*

சீறினோர் தொகை கொஞ்சமா! ஆத்திரத்தைக் குழைத்தெடுத்து நீட்டினோர் பட்டியல் சிறிதா! அன்போடு உறவாடியோரெல்லாம், பேசுவதே தவறென்றெண்ணிப் போன காட்சிகள்தான் மறக்கக்கூடியதா! அம்புபட்ட மான் அலறும்; சாகும். நாமோ சாகாத மான்கள் போல், சங்கடத்துக்கும் பாசத்துக்குமிடையே கலங்கி நின்றோம்! அதுபோது, சகோதரர்கள்போலப் பழகினோர்கூடசமர்க்கோலப் கொண்டனர். 'ஓருயிர்-ஈருடல்' என்று மாற்றார் மருள அன்பு சொரிந்து பழகியோர்கூட 'அவனுக்கென்ன தெரியும்' என்று பேசலாயினர்.

அப்பப்ப! அவர்கள் வீசிய சொற்கள், கோழையையும் வீரனாக்கும் புல்லையும்புலியாக்கும்!! ஆனால், நாமோ, அந்தச் சொற்களை வேதனையுடன் ஏற்றுக்கொண்டோம். மந்திரியாக வருகிறார் எம் தலைவர்!— என்று கூறி அதனால் வரும் பூரிப்பை அனுபவிப்பதைவிட, நமது கண்களையும் கருத்தையும் துழாவ முயன்றன அவர்தம் கண்கள். பவனியை நாமும் கண்டோம்! அதனைக் காட்டி கனைனால் ஏளனம் பேசிடும் இவர்தம் போக்கினையும் கண்டோம்! இதயம் துடித்தது— ஆனால், கண்களில—கனல் அல்ல!— புனல் வழிந்தது. எரிச்சல் அல்ல; பெருமூச்சுவிட்டோம்.

பாராளுமன்றத்தில் அவர் பேசிய பேச்சுகள்! — அதனைக் கண்டு அத்தனைக் காங்கிரஸ்காரர்களும் கைகொட்டி ஆரவாரித்த காட்சி—அவருக்கு இந்திய ராஷ்டிரபதி மரியாதை செய்யும் படம்—இந்தத் தூதரும் அவரும் அளவளாவினர், எதிர்க்கட்சிக்காரருக்குச் சூடு கொடுத்தார் என்று தினசரி வந்த செய்திகள்—அப்பப்ப, எளிதில் மறக்கமுடியுமா! எண்ணத்தை விட்டுத்தான் மாறுமா!!

கலியுக மனு, என்றோர் உண்டு—சட்டத்தை ஆக்கும் அவாது வல்லமையைப் புகழ. சேற்றிலே முளைத்த செந்தாமரை என்று வர்ணித்தோர் உண்டு—அவர் பிறந்த இடத்தையும், அவ்வளவு இழிநிலையிலிருந்தாலும் இவ்வித ஏற்றம் பெற்றார் எனும் ஆச்சரியத்தையும் விளக்க. அடடா! எழுதாத ஏடுகள் உண்டா? புகழாத தேசியத் தலைவர்கள் உண்டா? பொன்னே என்றோரும், கண்ணே என்றழைத்தோரும், இந்திய மாதாவின் மணிமுடியில் ஜொலிக்கும் அழகு வைரமே என்று வர்ணித்தோரும், சாணக்கியனின் சாதுர்த்தியம்—யாக்ஞவல்யரின் விஷய ஞானம்—ரிஷீஸ்வரர்களின் திறமை—இந்து மத தபோதனர்களின் எண்ணத்தை அறிந்துணரும் பண்பு. எல்லாவற்றையும் குழைத்தெடுத்த மதியூகி எனப் பாராட்டினோரும் கொஞ்சமா?

ஆசியாவின் ஜோதியே அழைத்துப் பேசுகிறார்! காங்கிரஸ் சட்டசபைக் கட்சிக்கூட்டத்திற்கு இவர் சென்றால் தனி மரியாதை உண்டு! இவர் சொல்வதுதான் வேதவாக்கு! — என்று வீதிமூலைகளில் நமது காதுகளில் படவேண்டுமென நலிந்துபோன இனத்தாரின் தலைவர்கள் பேசிய பேச்சுகள்தான் எத்தனை எத்தனை.

அல்லாடியார் புகழ்ந்தார்! ஐக்கிய மாகாணம் வாழ்த்திற்று! வங்கப் பிரதிநிதிகள் 'தங்கக்கட்டி எமது சட்ட அமைச்சர்' என்றனர்! பஞ்சாப், சிந்து பாடிற்று! பம்பாய், மகிழ்ந்தது! 'அரசியல் நிர்ணயசபையில் அடுக்கடுக்காக சட்டங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றுகிறார், எங்கள் சட்ட மந்திரி. பாகிஸ்தானே! பக்கத்துநாடே!! உன்னால், உனக்கென ஒரு அரசியலமைப்பை எற்படுத்திக்கொள்ளமுடியவில்லை. இதோ எங்கள் அரசியல் நிர்ணய சபை செய்கிறது! எங்கள் சட்ட மந்திரி செய்கிறார். இவரைப்போல் திறமை கொண்டோர், உண்டோ உங்களிடத்தில்?' என்று வாயால் அல்ல, கண்ணால், கேட்ட காங்கிரஸ்காரர்கள் ஆயிரமாயிரம்!

அத்தனைப் பெருமதிப்பும்,

கவுரவமும், பாராட்டும், பவனியும், படைபல சூழ்ந்துவர வந்த அழகும் பத்திரிகைச் செய்திகளும், படவிளக்கங்களும், ஆசார உபசாரங்களும், பட்டமளிப்பும் பரவசமும், அனுபவித்து மகிழ்ந்தாரே, நமது ஆருயிர் நண்பர், பழங்குடி மக்களின் பாதுகாவலர், டாக்டர் அம்பேத்கார், அவர் எங்கே, இன்று?

இதோ, செய்தி! நாகபுரியிலே உள்ள ஓரிடத்திலே பார்லிமெண்டுத் தேர்தலிலே நின்று, தோற்கடிக்கப்பட்டு நிற்கிறார். தோற்கடித்தவர், யாருமல்ல; காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். வீரனே, வீழ்ந்தாயோ?—என்று அன்று நாம்கலங்கியபோது, ஆத்திரச் சேற்றையும் வார்த்தைக் கூட்டத்தையும் வரம்பு மீறி வீசினோரைப் பார்க்கிறோம்! அவர்களும் நம்மைப் போலத்தான், கலங்குகிறார்கள்.

டாக்டர் அம்பேத்கார்!—இந்தப் பெயர், சாதாரணமானதல்ல. இன்றுள்ள பல ஏனோதானோக்கள் பேனா பிடிக்காத காலத்திலேயே எழுத்தை வாளாக்கிய அறிஞர். காந்தியடிகளே கண்டு மிரளக்கூடிய அளவுக்கு பழங்குடி மக்களுக்கிழைக்கப்படும் அநீதியை எடுத்துக்காட்டிய, செயல் வீரர். 'இந்து மதமா? என்னய்யா, செய்தது, இந்த மதம்! எங்களை ஐந்தாம் சாதிக்காரனாக ஆக்கியது தானே மிச்சம்!' என்று அதட்டிக் கேட்டவர். நாட்டின் நாலுபகுதிகளிலும் வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லோருடைய எண்ணத்திலும் தளிர் நிலவாக — புது யுகம் காட்டவந்த பூதேவனாக — காட்சி அளித்தவர். அத்தகைய ஒரு ஆற்றல் வீரர், தோற்கடிக்கப்பட்டார்—துவண்ட நிலையில் சென்றார்—எனும் செய்தியைக் காணும்போது, துயரம் எழாமலிருக்குமா? சோகம் ஏற்படாமலிருக்கமுடியுமா? அவரது பெருமையை எழுதவேண்டிய பேனா, வீழ்ச்சியையன்றோ குறிக்கிறது!— என்று அவர் அமைச்சர் ஆனபோது — அல்ல! ஆக்கப்பட்டபோது—வேதனைக் கண்ணீர் சிந்திய நேரத்திலே, விழியிலே கேலியைக் குழைத்து நம்மரும் சகோதரர்களே வீசினார்கள். இன்றோ! அவர்கள், கண்களிலும் கண்ணீர், நமக்குந்தான். இரு உள்ளங்களும், ஒரே விதமாகத்தான் துடிக்கின்றன! இரண்டு கண்களிலிருந்தும் கண்ணீர்தான் வழிந்தோடுகிறது!!

ஏன்? என்ன காரணம்? அம்பேத்காரிடம், இந்த நாட்டுப் பழங்குடி மக்கள் எந்தளவுக்கு நம்பிக்கை வைத்திருந்தனரோ, அதே அளவுக்கு நாமும் வைத்திருந்தோம்! அவருடைய படங்கள், திறக்கப்படாத பொதுமேடைகள் கொஞ்சம்—அவரது கருத்துக்களை எதிரொலிக்காத ஏடுகள் கிடையாது. அவ்வளவு நம்பிக்கை இருந்தது அவர்மீது! நமக்கு!! ஆம், நமக்கு. ஆனால், 'நமக்கு' என்பதை ஆர்வத்தின் விளைவாலோ, ஆத்திரத்தின் காரணத்தாலோ, உணர மறுத்தனர் பழங்குடித் தலைவர்கள். இந்தக் கேட்டின் காரணமாகத்தான், காங்கிரஸ் மந்திரிசபையில் 'நம்முடைய' நம்பிக்கை நட்சத்திரமும் 'கனம்' ஆக்கப்படுகிறதெனும் செய்தியைக் கண்டு நாம் வீரனே, வீழ்ந்தாயோ! என்று வெதும்பியபோது, பழங்குடி மக்களில் சிலர் 'பார்! பார்! அருமை — ஆத்திரம் என்று சீறினர். அதட்டியும் கூறினர், "எங்கள் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் மந்திரியாக வந்தால்தானே தாழ்த்தப்பட்டுப்போன எங்கள் வாழ்க்கையிலும் ஏதாவது நன்மைகளைச் செய்யமுடியும்" என்பதாக, கர்ஜித்தனர்! உனக்கும்—எனக்கும் சம்பந்தம், வேண்டாம் என்று வெகுண்டனர்! 'ஆகாது, தொடர்பு, கூடாது தொடர்பு', என்று அறிக்கை விடுத்தோரும் உண்டு. அனல் தெறித்தது பேச்சில்! காரம், கொப்பளித்தது உரையாடும்போது!

ஆனால், இன்று. அவர்கள், கண்களிலும், நீர்! நமது விழிகளிலும் அதே நீர்தான்!! அவர்களுக்காவது இடையில், சில காலம், கண்ணீர் வடிவது நின்றது; களிப்பால். நமக்கோ, அன்றும் இன்றும், கண்ணீர் நிற்கவில்லை! இந்தக் கண்ணீரின் தன்மையை பன்னீர்த் துளியினர் புரிந்துகொள்ளாதது, வியப்பில்லை—அழகான மாளிகை, சப்ர மஞ்சம், சல்லாபக் கூடம், உல்லாசமெனும் வாழ்க்கை ஓடம், உயர்ஜாதியெனும் வீட்டுக் கதவு, வைதீகமெனும்வெறி நாய், பழைமை எனும் விலங்கு, இத்துணை ஆடம்பரத்துடனிருக்கும் சுகவாசிகளுக்கு, வீழ்ந்து போன மரபினைக் கண்டு நாம் சிந்தும் கண்ணீர், கேலியாகத் தென்படுவது ஆச்சரியமில்லை. 'நம்மவர்'களோ, கருதினர்!

விழுங்கவந்த மலைப்பாம்பைவிரட்டச் சென்றபோது, வழியில் கிடைத்த வாகரிசியைக் கண்டு 'சமைத்து உண்ணப் போகிறோம்! இதுபோதும், எமக்கு' என்றுவந்தோரில்சிலர்பிரிந்துவிட்டால், பிரிந்தோர

எதிர்பார்க்கலாமா?

"சென்னை சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறோம். அவர்களது ஆலோசனை கிடைத்ததும், நடவடிக்கை எடுக்கப்படும்"—என்று டில்லி பீடம், கூறியிருக்கிறது!

இதனைக் குறிப்பிட்டு டில்லி பாராளுமன்ற உறுப்பினரான, உழைப்பாளர் கட்சி நண்பரான தோழர் கோவிந்தசாமி கச்சராயர் அவர்கள், நமக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார். பாராள்வோரைப் பார்த்து, "ஐயன்மீர்" திருச்சி மாவட்டத்திலுள்ள டால்மியாபுரம் எனும் ரயில்வேநிலையத்தை கல்லக்குடி என்று மாற்றும்படி சென்னை மாநில மக்கள் விரும்புகிறார்களே, அதுபற்றி என்ன செய்தீர்கள்?" என்று கேள்வியொன்று கேட்டதற்கு, மேலே குறிப்பிட்டபடி பதிலளிக்கப்பட்டிருக்கிறது.

ஆச்சாரியார் ஆட்சியில்இந்தப் பெயர் மாற்றத்துக்கு விதவிதமான வியாக்யானங்கள் கூறப்பட்டதை அறிவோம். காமராஜர் ஆட்சியில் என்ன பதில் கிடைக்கிறதோ! பொறுத்திருந்து பார்ப்போம்!!

*

டன்றி வருந்திநிற்கும்கூட்டத்தைப் பார்த்து, 'வம்பன்! தும்பன்! நாங்கள் வரகரிசியைச் சமைத்துச் சாப்பிடுவதைக் கண்டு சகிக்காத மனத்தினன்!' என்று கல்லையும் மண்ணையும் வாரியிறைத்தால், எப்படியிருக்கும் உள்ளம்? வாய்பிளந்து நிற்கும் மலைப்பாம்பை எண்ணுவதா! வரும் வழியில், வரகரிசிக்காக, வாழ்க்கையை விரயமாக்கும் சகோதரர்களுக்காக ஏங்குவதா!!—இதே, நிலை தான், நமக்கு. நம்மை வாட்டிடும் மலைப்பாம்பு, மதரூபத்திலே, சமுதாய உருவிலே, பொருளாதாரத் துறையிலே, இருக்கிறது, இங்கு! அந்தப் பாம்பை ஓட்டிவிட்டு, "நாம் எல்லாம்" வாழவேண்டு மென்பது தான், நமது கொள்கை.

அதனால்தான் வீழ்ந்த மாபுக்கு நம்பிக்கையூட்டும்விதத்தில் எந்தத் தலைவர் கிடைத்தாலும், அவரை வாழ்த்துகிறோம்! வரவேற்கிறோம்!! இவர் இந்த ஜாதிக்காரர் – அவர் தாழ்ந்த இனம் – இவர் கொஞ்சம் மேல்—அவர் கொஞ்சம் மட்டம்— என்ற தாரதம்யம் தலைகாட்டுவதில்லை, நமது இயக்கத்தில்!

அம்பேத்கார் ஆனாலும் இரட்டைமலை சீனிவாசன் ஆனாலும் தியாகராயர் ஆனாலும் கடலூர் நண்பர் ஆனாலும் காங்கிரசிலுள்ள காமராஜர் ஆனாலும், பொதுக்கேட்டை ஒழிக்க முன்வரும்போது அன்புக்கரம் நீட்டுகிறோம் — அகமகிழ்கிறோம். இந்தப்பொதுநிலையை, "நாம் எல்லாம் ஓர் குடும்பம்" என்கிற அரியகருத்தை அறியமறுப்போர், சில பல வேளைகளில், தேளைத் தேனெனநம்பி, நம்மையே ஏசிப் பேசத்தலைப்பட்டு விடுகின்றனர். சாதிப்பெயர்களைச்சொல்லி, சங்கங்களை உருவாக்கமுயலுகின்றனர்! இந்த முயற்சியின் விளைவால் தான், அன்பர் அம்பேத்கார் அமைச்சர் ஆக்கப்பட்டபோது, 'வரகரிசிக்கு ஆசைப்படாதீர்!', என்று எச்சரித்த நம்மீது, எரிச்சல்களைத் தொடுத்தனர்—பழங்குடி மக்களில், சிலர். இன்றோ, கண்ணீரோடு கண்ணீர் கலக்கிறது. வெதும்புகிறோம், நாம்—வீரன், ஒரு தேர்தலில், தோற்கடிக்கப்பட்ட செய்திகேட்டு!! ஆனால், அம்பேத்கார் அமைச்சராக இருந்தபோது, ஏற்றிப்போற்றிய மாற்றாரோ—கேலிக்கணைகளை வீசுகின்றனர்! கண்ணே—பொன்னே—என்றோர், மண்—சாம்பல் என்று உரைக்கின்றனர்! பண்டிதநேருவின் பக்கத்தில் அம்பேத்கார்வந்தபோது அகமகிழ்ந்தனர்—ஆனால், இன்று! அதே பண்டிதநேரு, தனது கட்சித்தோழரை நிறுத்தி, தோற்கடித்திருக்கிறார், இவரை!! கலங்குவது, நாம்— மாற்றாரல்ல.

"எவ்வளவு உதவி செய்திருக்கிறார்? வெள்ளையனை விரட்டிவிட்டு ஏங்கிய நேரத்தில், பலம்கொடுத்தாரே, இவர்! இவருக்கேன்போட்டி? விட்டுக்கொடுப்போம்!", என்று எண்ணவில்லை. முதல் முறை பம்பாயில் நின்றபோதும், காங்கிரஸ்காரர் அம்பேத்காரை எதிர்த்தார்—தோற்கடித்தார். தனக்கு சகாவாயிருந்த ஒருவர் சட்டமன்றத்துக்கு வரமுடியாமற்போனதைக்கண்டு, சிறிதும் கவலைப்படவில்லை, பண்டிதநேருகுழாம். மீண்டும் நின்றார்! விட்டுக்கொடுக்கலாம்பண்டிதர்கட்சி!! அண்மையில் பார்த்தோம் — முதலில் தேர்தலில்தோற்கடிக்கப்பட்ட ஆச்சார்ய கிருபளானி இரண்டாவது முறையாகத் தேர்தலில் நின்றபோது பண்டிதர் கட்சி, விட்டுக்கொடுத்ததை. ஆனால், 'அந்தப்பாக்யம்', அம்பேத்காருக்குக் கிடைக்கவில்லை! எதிர்த்து தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்!! பழையதோழர் எனும் பரிவு, கிருபளானி விஷயத்தில் அரும்புகிறது; மாற்றுக்கட்சிக்காரர் எனும் மனமாச்சரியத்தைக்கூட அந்தப் பரிவு, நீக்கச்சொல்கிறது. ஆனால், அம்பேத்கார் விஷயத்தில். பரிவுமில்லை! பற்றுமில்லை! எதிர்ப்பு —தோல்வி. இந்தக்கட்டத்தை எண்ணிடும்போது புலப்படும் உண்மையைப் புரிந்து கொள்ளவேண்டும், நம்முடையவர்கள்.

"ஆபத்தில்மாட்டிக்கொண்டுவிட்டேன், ஐயா! என்னைக்காப்பாற்றும்!!' என்று குழம்பிய குட்டையின் சேற்றில் சிக்கிக்கொண்ட புலியொன்று, வழியில்சென்றுகொண்டிருந்த ஒருவரைப் பார்த்து முறையிட்டதாம். விழித்துப்பார்த்த அவரிடம், "காப்பாற்றினால் இந்த தங்கவளையலை தருகிறேன்", என்றுகாட்டிற்றும். சலன புத்திகொண்ட வழிப்போக்கர், சொந்தவேலையை மறந்து, குளத்திலிறங்கி புலியைவிடுவித்தாராம்!! சிக்கல்தீர்ந்ததும், புலி, புசிக்கும் உணவாக்கிக் கொண்டதாம்அந்தஆளை. சிறுவகுப்புக்கதை. சந்தர்ப்பத்துக்குப் பொருந்திய கதை!! அந்தப்புலியின் நிலையிலிருப்பதுதான், இன்றையகாங்கிரஸ்கூடாரம். தன்னுடைய ஆபத்துக்களைப் போக்கிக் கொள்ள அயலாரைநாடும்; ஆனால் கவலைதீர்ந்ததும், அகப்பட்டவர்களைக் காவு கொள்ளும்.

இந்த உண்மையை நம்மவர்களுக்கு—சில நாட்களாக, கடலூர் நண்பர் 'கனம்' ஆனதிலிருந்து — பலப்பல எண்ணிடும் வீழ்ந்துபோன மரபுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறோம். கடலூர் நண்பர். 'கனம்' ஆனார்! பெருமூச்சு விடுகிறோம். அம்பேத்கார், புலியின் வாய்க்குள் வீழ்ந்தபோது, எத்தகைய வேதனையை அனுபவித்தோமோ அதே வேதனை—மீண்டும், நமக்கு. கடலூர் நண்பரின் போக்கு, சிக்கித்திண்டாடும் சமுதாயத்தைக் கதியற்ற நிலைக்கு இழுத்துச் செல்லும் வழுக்குப்பாதையெனக் கூறுகிறோம்! ஆனால், சிலர் அதனைப் பனிவதுப் பாதையென நம்பி,பதைக்கின்றனர்!! வீழ்ந்துபோனோர், தமது பாம்பரையைச் சேர்ந்த ஒருவர், தமக்கு வாழ்வளிக்கும் பீடத்தில் அமர்வதைக்காண அகமகிழத்தான், செய்வர். அந்த அகமகிழ்ச்சி போதுமா, தனது பாம்பரைக்கு! 'கனம்' ஆவோர் சிந்திக்கவேண்டிய விஷயம் இது.

வழிகாட்டியாக இருக்கும் கலங்கரை விளக்கம், ஒடிந்துபோய், தவறுகப் பாதை காட்டினால், அதனை நம்பிவரும் கப்பல், எங்கேயாவது தவறிச் சென்று மோதி உடையும்! தவறு கப்பலிடம் அல்ல, கலங்கரை விளக்கத்தின்மீது. ஆனால் இந்த உண்மையை நண்பர் தெரிந்தோ அல்லது தெரியாமலோ இன்று 'கனம்' ஆகியிருக்கிறார். 'கனம்' ஆகிய நாள்முதல் அவருடையபடங்கள், பத்திரிகைகளில்! காமராஜருக்கு அருகில், அவர்! சட்ட சபையில், எதிர்க் கட்சி கேள்விகளுக்கு சூடான பதில் தருகிறார் — எனும் செய்திகள்! தேசியப் பீரங்கிகள், வழக்கமான பாதையில் முழக்கமிடுகின்றன. இந்தச் சப்தத்தைக் கேட்

டிடும் உழைப்பாளர்த் தோழர்களில் சிலர் மலைக்கலாம் சகஜம்.

எத்தனை வகையான தலையங்கங்கள்! ஒவ்வொன்றிலும் எத்துணை வர்ணனைகள்! இன்று — அம்பேத்கார், நாகபுரி தொகுதியில் தோற்றார். சஞ்சலப்படுகிறோம், நாம். ஆனால் அவரைப் பாராட்டிப் புகழ் பாடிய 'தினமணி' ஏடு, ஆனந்தப் பள்ளுப் பாடுகிறது! அகமகிழ்ச்சி துள்ள, கிண்டல் செய்கிறது!!ஐயா! "அம்பேத்காரே! இப்போது மா, ஜனங்கள் உம்மைத் தோற்கடித்து விட்டார்கள். செச்சே! இந்த ஜனங்கள் ரொம்ப நன்றிகெட்டவர்கள், அவர்களுக்கு நல்வாழ்வளிக்கப்பாடுபட்ட உங்களைத்தோற்கடிக்கலாமா? நன்றிகெட்ட ஜனங்கள்! எனினும் கவலைப்படாதீர். முயற்சி திருவினையாக்கும். இதோடு நின்றுவிடாமல், அடிக்கடி தேர்தலில், நில்லும்' என்பதாக, துணைத்தலையங்கம் தீட்டுகிறது. படித்தால், பழைய பாசம் கொண்டோர் மனதில், எரிமலை எழும்பும்! அவ்வளவு ஏளனம் — கிண்டல். எழுதுவது, தினமணி.

"நோட்டுக் கத்தைகள் இதோ! மேலே பறந்தபடி நோட்டுகளைச் சொரிகிறது, ஆகாயவிமானம்! பணத்தை வீசினால் பல்லிளிக்காதோர், உண்டோ உலகில்? என்னை எதிர்த்து நிற்கும் ஆசாமி, ஆஸ்திக்காரரா? இல்லை! என்னை ஆதரிக்கும் கட்சி எது தெரியுமா? காங்கிரஸ். அந்த ஆசாமியை நிறுத்திவைத்திருப்பது உழைப்பாளர் கட்சியாம்! பெயரே பலருக்குப் புதிது. நேற்று முளைத்த காளான்! நானிருப்பதோ அறுபதாண்டு மாநிழல்!! இரும்புப் பெட்டியைத் திறந்து வைத்திருக்கிறேன். இந்தியா முழுமையிலும் டஜனுக்கு மேல் பத்திரிகைகள் உண்டு, எனக்கு. யாரால் என்ன செய்ய முடியும்? திராவிட முன்னேற்றக் கழகமாம்—உழைப்பாளரை ஆதரிக்கிறதாம்—இதெல்லாம், பஞ்சு பஞ்சாகப் போகிறது! அவர்களது ஆதரவுடன் என்னை எதிர்க்கும் ஆசாமியையே விலைக்கு வாங்கிட முடியும். இன்னும் ஒரு லட்சம்! என்பாக்கெட்டில் இருக்கிறது பார்லிமெண்டுப்பதவி!!", என்று திண்டிவனம் தொகுதியில் கொக்கரித்துக் குப்புற வீழ்ந்த கோயங்காவின் ஏடு, அம்பேத்காரின் தோல்விக்கு, கிண்டல் செய்கிறது! தோற்றுவிட்டாராம் அவர்—அந்தச் செய்தி, "மணி"யாரின் மனதில் உணர்ச்சிப் பிரவாகத்தை உண்டு பண்ணுகிறது. ஏட்டின் சொந்தக்காரர் கோயங்கா, வெற்றி வீரனல்ல; வீழ்ந்த கோமான். அவரது வீழ்ச்சியின்போது, முயற்சி திருவினையாக்கும், எஜமான்!, என்று எழுதவில்லை, தினமணி. நாட்டின் தேர்தலில் நாடாண்ட அமைச்சரெல்லாம் மூக்கறுபட்டபோது, முகிழ்க்கவில்லை இந்த உபதேசகாண்டம். ஆனால், ஒரு அம்பேத்கார் தோற்றதில், ஆனந்தம்!கிண்டல்!! ஐயா, அடிக்கடி நில்லும்' என்று உபதேசம் புரிகிறது, இந்த உதவாக்கரை ஏடு.

எலி, கேலி செய்யுமளவுக்கு, புலி வீழ்ந்ததே!—எனப் பொங்குகிறது, நம் உள்ளம். எப்பேற்பட்ட வீரர், அம்பேத்கார்! எத்தகைய வீழ்ச்சி அவருக்கு!! ஏட்டின்மீது கோபமும், வீழ்ச்சியுற்றவருக்காக கண்ணீரும், ஏற்படும்போது, தவளையும்பருந்தும் ஒப்பந்தம் செய்து உயரப் பறந்தாமே—அந்தக் கதை நினைவுக்கு வருகிறது. குளத்துத் தவளை! வானத்துப் பருந்து!! இரண்டும் ஒப்பந்தம் செய்து கொண்டதாம். பருந்தின் காலோடு தன்னைப்பிணைத்துக் கொண்டதாம், தவளை! ஆபத்து நேரத்தில் ஆகாயத்தை ஊடுருவி உந்திப் பறந்ததாம், பருந்து. தவளை தத்தளித்து, பிணமாயிற்று! கூடா நட்பு, கொட்டிடும் தேளாகும்.

காங்கிரஸ் அமைச்சரவையைவிட்டு விலகிய அம்பேத்கார் பொதுத் தேர்தலின் போது கூடா நட்புக் கொண்டார். சோஷியலிஸ்டுகளோடுகூட்டுச்சேர்ந்து, பம்பாயில் போட்டியிட்டார். பம்பாய் வட்டாரத்தில் கேட்டால் சொல்வார்கள் —அம்பேத்கார் தன்னையே நம்பி நின்றிருந்தால்நிச்சயம் வெற்றி பெற்றிருக்கலாம் என்று! ஆனால், தன்னைப்பற்றிய நம்பிக்கை இழந்து, பிறர் உதவி தேடவேண்டியவரானார். அந்த உதவியோடு அசோக மேத்தாவும் இவரும் சேர்ந்துநின்றனர். தோற்றனர். இப்போதுநடைபெற்ற தேர்தலிலும் இருவரும் சேர்ந்து நின்றனர். தோற்றவர் அம்பேத்கார்! அசோக்மேத்தா வெற்றி பெற்றார்!! விந்தையான காட்சி. இவர் தோற்று அவர் வெற்றி பெற்றார். காரணம் என்ன? சிந்தித்தால் விளங்கும்! வீரனே! விழி நிறைந்தவனே! தலைவா!—என்று, பின்வரக் காத்துக் கிடக்கும் விடுதலை விரும்பிகளின் பட்டாளத்தின் உதவியை விட, ஆர்ப்பாட்டக்காரர்களின் ஆதரவு போதும், என்ற அவசரம் ஏற்படாமலிருந்திருந்தால், அம்பேத்கார் தோற்றிருக்கமுடியாது. மறைந்த வீரர் ஜின்னாவைப்போல அம்பேத்காரும் நிலையான இடம்பெற்றிருக்கலாம்! ஆனால், அவர் ஒரு நிலையில் இல்லை!! அந்தோ, தினமணி, கேலி புரிகிறது—நமக்குக் கண்ணீர் வருகிறது.

"அரசியல்வாழ்வு ஒரு மணல்மேடு; உச்சியில் ஏறுவது கடினம். பெற்ற இடத்தைக் காப்பாற்றிக்கொள்வது சுலபமல்ல. உயரமான இடத்திலிருந்து கண்ணுக்கெட்டிய தூரம் காட்சிகளைக் கண்டு ரசிக்கலாம். ஆனந்தமாகக்கூட இருக்கும். ஆனால் சிறிது கால் வழுக்கிச் சாய்ந்தாலோ உச்சியிலிருந்து உருள நேரும்! விளைவு சாதாரணமாயிருக்காது!", என்று சேலம்மாட்டிலே தி. மு. க. பொதுச் செயலாளர் கூறியதை, அரசியல் வாழ்விலீடுபட்ட அனைவரும் எண்ணிடவேண்டும். அந்த எண்ணம் மலர்ந்தால் நிமிடத்துக்கு நிமிடம் கொள்கை மாற்றும் குறுக்குவழி, தோன்றாது! நிறைகுடம் ஆகலாம்! நிலையான இடமும் பெறலாம்!!

இதனையே கடலூர் நண்பருக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். நண்பரைவிட, அம்பேத்கார், பல விதங்களில் உலகக் கண்முன் நிற்பவர்—அவருக்கே, இக்கதி! வருந்துவது மாற்றாரல்ல; நாம்தான் விடிவெள்ளிகள்போலத் தோன்றி விண்மீன்களென மின்னி, மின்மினிகள் போல் மறைந்துவிடும் வேதனை, வீழ்ந்துபட்ட மாயில், தொடர் கதையாக நடைபெறும் துயரத்தை எத்தனை நாட்களுக்கு இந்தத் தாயகம் தாங்கிக்கொண்டிருக்கும்?

சொல்லுகிறார்களாம்உழைப்பாளர் கட்சி சகோதரர்களில், சிலர் "எங்களவர் அமைச்சராகவந்தால்தானே எங்கள் சமூகத்துக்கான நன்மைகளைச் செய்துகொள்ள முடியும்"

என்பதாக. இதனையே 'கனம்' ஆன நண்பரும், கூறுகிறாராம். 'கனம்' ஆனவர் கூறுவதில், பொருளுண்டு. ஆனால், நண்பர்கள் சிலரும் அது போலக் கூறுவதுதான் விளங்காத புதிராயிருக்கிறது. ஓரிருவர் 'உயர்ந்த ஸ்தானத்தைப்' பிடித்துவிடுவதால், எங்ஙனம் உருப்பட்டுவிடும் அந்தச் சமூகம்?

'எங்களுக்கு' என்கிறார்கள் அவர்கள்! 'நமக்கு' என்கிறோம், நாம்!! ஏனெனில் அவர்கள் மட்டுமல்ல, இந்த நாட்டின் பெரும்பாலான மக்களே, ஏழ்மையிலும் மீளமுடியாத வேதனையிலும் ஆழ்ந்துகிடப்பவர்கள்தான். கள்ளிக்காடு முழுமையும் கனிமலர்ச் சோலையாக வேண்டும். அப்போதுதான், களிப்பு மலரும்! வாழ்வு துலங்கும்! மலைப்பாம்பின் வாயிலிருந்து மறக்குலத்தைக் காப்பாற்ற முடியும். அதனை விடுத்து, அம்பேத்கார் பாதை புகுவது, கண்ணீரைக் குறைத்திடாது! பெருக்கும்!—இதனை, உழைப்பாளர் நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

வானவில், நிரந்தரமானதல்ல! புலியின்வாய், சக்கையாக நேரிடும்!! போதிக்கிறது, அம்பேத்கார் அவர்கள், தோல்வி. இன்றைய நிகழ்ச்சி—நாளைய பாடம். உணரவேண்டும், நாட்டின் நலன் விரும்புவோர். உணராவிடில், கண்ணீர் காயாது! வாழ்வும் மலராது!!

ஆண்டவன் கிருபையால்!

திருவிழாக்களும் தேரோட்டங்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன, நாலுபக்கங்களிலும்.

பல இடங்களில் கிடைத்த 'விளைவுகளை'க் கணக்கிட்டுக்கொண்டிருப்பார்கள்—பலர் நாமும் ஒரு கணக்கெடுத்துப் பார்ப்போம்!

*

பக்தர் பரமகுரு

செலவு

அர்ச்சனை டிக்கட் 3	1—8—0
குருக்களுக்கு தட்சணை	1—0—0
தேங்காய், சூடம் வாங்கிய வகையில	1—0—0
ரயில் செலவு (மனைவி குழந்தைகள் உட்பட)	8—0—0
சில்லரைச் செலவுகள்	5—0—0
மனைவியின் கழுத்திலிருந்து 6 பவுன் சங்கிலி திருட்டுப் போனவகையில நஷ்டம்	360—0—0

விளைவு

"என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை; எங்கே போவேன் ரூ. 360க்கு? வேண்டாமடி—இரவல நகை வாங்கிப் போட்டுக்கொள்ளாதே. கோயிலுக்குச் சாமி கும்பிடத்தானே போகப்போகிறோம், என்றேன்—கேட்டாளா? மினுக்கிக்கொண்டு வந்தாள்! போய்விட்டது, நகை. என்ன செய்வது இப்போது? 400 ரூபாய் ஆகுமாமே! எங்கே போவேன். விடமாட்டார்களே, இரவல் கொடுத்தவர்கள். பணத்திற்கு 'பத்திரம்' எழுதிக்கொடுப்பதா? ஐயோ, கடவுளே!''

குருக்கள் சுப்பு

வரவு

அர்ச்சனைமூலமா என்ன கிடைச்சதுன்னு கேட்கிறேள்! எப்படி அதற்குள் சொல்லமுடியும்? எண்ணிண்டிருக்கேன் இன்னும்! ஆயிரமாயிரமா ஜனங்க வந்தா. ஆனா, எல்லாம் எனக்கெங்கே கிடைக்கிறது. என்கூட போட்டி போட இன்னும் நாலு குருக்கள் இருக்காளே! அவா இல்லாட்டி, நல்ல சான்சுதான். போட்டி எங்கேதான் இல்லாமலிருக்கு! பத்து நாளிலும் எனக்குவந்த வருமானத்தைக் குத்துமதிப்பா சொல்றேன், கேளுங்கோ,

அர்ச்சனைமூலம் (சுமார்) ரூ 1000
10 நாள் நல்ல சாப்பாடு
வேளை 1க்கு ரூ 1 பொறும் 25
வேஷ்டி! அது இது என்று
கோயிலார் கொடுத்தது வேறு இருக்கு.

விளைவு

"பார்யாள் பலநாளா சொல்லிண்டிருக்கா. வைரபேசரி வேணுமாம்—வாங்கணும். குழந்தைகள் கழுத்திலும் ஏதாவது செஞ்சு போடணும். எதிர்வாடையில் ஒரு வீடு விலைக்கு வருகிறதாம்; விலை பேசச் சொல்லணும்.''

பஜனைக்கோஷ்டி பண்டாரம்

"அடடா! கருடசேர்வை நடந்தப்போ, 'ரகுபதி ராகவ ராஜாராம்' என்று நான்போட்ட சப்தம், வீதியையே அலறடித்தது. பக்தி வேகத்தால் எப்படி யெப்படியெல்லாம் குதித்தேன்! என்ன கிடைத்தது. ஒரு வேளை சோறுகூட ஒழுங்காகக் கிடைக்கவில்லை! சாமி புறப்பட்டுச் சென்றால் அவருக்கு அருகில் செல்லும் அருகதைகூட எனக்கில்லை. வேத பாராயணக்கோஷ்டிக்குத்தான் அந்த அதிர்ஷ்டம்! அவர்கள் எவ்வளவு மெதுவாகப் பாராயணம் செய்தார்கள் தெரியுமா?

விளைவு

"பேசக்கூட முடியவில்லை—தொண்டை வலிக்கிறது.

உடம்பெல்லாம், ஒரே வலி. காலெல்லாம் வலிக்கிறது வைத்தியர் வைத்தியலிங்கத்தைக் கேட்டேன்—ஜுரம் வரும் என்று சொல்கிறார்!''

வேத பாராயணம் வேதாந்தம்

"பத்து நாளும் பலமான சாப்பாடுபோங்கோ! இலை ஒன்றுக்கு இரண்டு ரூபா, பொறும், எத்தனை பேர், எங்க காலில் விழுந்தா தெரியுமா? ஊருக்கு வரும்போது, ஆளுக்கு இரண்டு ஜோடி வேஷ்டி கொடுத்தா! பார்யாளுக்கும் ஒரு புடவை எடுத்து வந்திருக்கேன்!! ஏதோ, ஈஸ்வரன் கிருபையிலே, இவ்வளவுதான் கிடைத்தது இந்த வருஷம்.

சாமி தூக்கி கண்ணுச்சாமி

வரவு

ஒரு நாளைக்கு கூலி 0—8—0

விளைவு

"தோளில் காயம்! காலில் இரத்தம் கசிகிறது! அப்பப்ப, என்ன பாடு படுத்திவிட்டார்கள்!!''

'ஜோப்படி' சோமு

"வரவு ஏராளந்தான் நினைத்தேன்! ஆனால் பாழும் இந்தப் போலீஸ்காரர்கள் பிடித்துக்கொண்டுவிட்டார்கள். ஆறு மாதமோ! மூன்று மாதமோ!!—யார் கண்டார்கள்? அவளுக்கு வயிற்றில் கர்ப்பம் — மாசம் எட்டு. ஐயோ, கடவுளே! ஏழையை ஏன்டா, திண்டாடவைச்சே!!

வாணவேட்டு

வைத்தியநாதன் மனைவி

"தாலி போச்சய்யா, தாலி போச்சு! என் புருசன் போயிட்டாரு. வேட்டு வைக்கிறப்ப, மருந்தை கிட்டித்து தீ. வைச்சதாம் என் புருசன், திடீர்னு வெடிச்சு, உடம்பெல்லாம் கரியாயிட்டுதாம். ஆஸ்பத்ரிக்கு தூக்கிகிட்டுப்போயிருக்காங்களாம்! பிழைக்கிறது சந்தேகமாம்!! ஐயோ, ஆண்டவனே? உனக்கு கண்ணில்லையா! கபோதியா, நீ!! ஏழை வயத்திலே, அடிச்சியே யாரு, இருக்காங்க, இனி."

'டிரஸ்டி' தியாகராஜன்

"ஒரு தினுசா 'உத்சவம்' முடிந்தது! பெரிய பெரிய மனுஷாளெல்லாம் வந்தா. மந்திரிகூட வந்தார். பரிச்சயம் ஏற்பட்டது, எனக்கு. வரவு என்னவென்று கேட்கிறீர்கள்! கணக்கை முடித்து விட்டுப் பிறகு, சொல்லுகிறேன்"

*

ஒருசில செய்திகள்

திருச்சூரில்!

பூரம் திருவிழாவில் சென்று கொண்டிருந்த இரண்டு கோயில் யானைகள் வழியில் ஒன்றையொன்று தாக்கிக் கொண்டன. ஒரு பாகன் படுகாயமடைந்தார்.

வாண வேடிக்கைகள் நடந்து கொண்டிருந்தபோது, திடீரென்று ஒரு வாணம்வெடித்ததன் விளைவாக அருகிலேயிருந்த ஒரு இளைஞன், தாக்குண்டு மாண்டான்.

வெடிக்காத வேட்டைச்சோதனையிட்டுக் கொண்டிருந்த மூன்று வேட்டுக்காரர்கள், காயங்களோடு ஆஸ்பத்திரிக்கு வந்தனர்.

திருக்காரவாசலில்!

திருவாரூருக்கு அருகாமையிலுள்ள இவ்வூரில் நடைபெற்ற திருவிழாவின்போது, கழுத்துச் சங்கிலியைத் திருடியதாக ஒருவன் கைது செய்யப்பட்டான்.

வேட்டு வெடித்தவர், படுகாயமடைந்து, உடம்பெல்லாம் புண்ணான நிலையில், ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டிருக்கிறார்.

திருவானைக்காவலில்!

வாணம் வெடித்ததன் காரணமாக, இரண்டாயிரம் கட்டுகளைக் கொண்ட ஒரு பெரிய வைக்கோற்போர் எரிந்து சாம்பலாயிற்று.

போகிற போக்கில்!

[சேந்தேன்]

மேற்கு ஜெர்மனியில் புதிதாக ஒரு சங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்களாம்! பெயர், வாரிசசங்கம்!! உறுப்பினர்கள்மொத்தம் 200, பேர் 250 கோடி பவுன் சொத்துக்குரிய வாரிசைக் கண்டுபிடிப்பதுதான், இந்தச் சங்கத்தின் நோக்கமாம். சொத்து, இந்தியாவில் ஆண்ட ஒரு மன்னனுடையதாம்!

*

வடநாட்டின் சரித்திரத்திலே பல விசித்திரமான மணிமுடிதாரிகளைப் பற்றிப் படித்திருக்கிறோம். வந்தவனுக்கெல்லாம் மண்டியிட்டனர், என்பதையும் அறிவோம். அப்படி வந்தவர்களில் ஒருவன் தானும், இந்த மன்னன்! ஜெர்மனியில் கசாப்புக் கடைகாரனாகயிருந்தவன்—டில்லியில், மணிமுடிதாரியாக இருந்திருக்கிறான்.

*

மணி முடி அவனுக்குக் கிடைத்தது, ரசமான விஷயம்! 18-வது நூற்றாண்டில் கிழக்கிந்தியக் கம்பெனி வந்தபோது, அவர்களோடு இந்தியாவுக்கு வந்தானும் அந்த கசாப்புக் கடைக்காரன். ஆனால் இந்தியாவுக்கு வந்தபிறகு இங்கிருந்த சுதேச மன்னர்களுடன் சேர்ந்துகொண்டு, பிரிட்டிஷாரை எதிர்த்தானும்! அந்தச் சேவையைக் கண்ட டில்லி பாதுஷா ஒருவர் டில்லிக்கு அருகிலிருக்கும் சார்தானு எனுமிடத்தின் ராஜாவாக அவனை ஆக்கினாராம்.

*

அந்த ராஜாவின் பெயர் ரீன் ஹார்ட் என்பதாம். 1778-ல் மாண்ட அவரை ஆக்ராவுக்கருகில் புதைக்கப்பட்டதாம். இந்தியாவில் அவருக்கு இருந்தபெயர் சும்ரூ என்பதாம். இவருக்குச் சொந்தமான 250-கோடி பவுனுக்கு யார் வாரிசு என்பதாகத் தெளிவாகத் தெரியவில்லை. அவரது பரம்பரையினர் சுமார் 500-பேர் இருக்கலாமாம்! அவர்களில் 200-பேர் சேர்ந்துதான் இப்போது வாரிசு சங்கம் அமைத்திருக்கிறார்கள்!! யார் உண்மையான வாரிசு என்பது கண்டுபிடிக்கப்படும் வரையில் அந்தச் சொத்து ஐரிஷ்பாங்கியொன்றில் இருக்குமாம். மேற்படி சொத்து எங்கிருப்பதென்றுமட்டும் தெரியவில்லை!

*

'நாடில்லாத ராஜா' ஒருவர் இருக்கிறாரே, இங்கு! அடையாற்றில்!! அவர் சென்னை சட்டசபையில் ஒரு 'உண்மையை' வெளியிட்டிருக்கிறார். ஆச்சாரியார் ஆட்சியை அகற்றப்பாடுபட்டவர்களில்தானும் ஒருவர் என்பதாக! யாரும் கேட்கவில்லை, அவரை' அவரே சொல்லுகிறார். எப்படிப் பாடுபட்டாரோ? எத்தனை இரதகஜதுரகபதாதியினர் புறப்பட்டுச் சென்றனரோ! அறியோம்!! ஆனால், ஒன்று விளங்குகிறது. ஆச்சாரியார் ஆண்டபோது அவருடன் கூடிக்குலவினர். இப்போது இங்கும் குலவிப்பழகிறார் இந்த வித்தை அந்தக் குடும்பத்துக்கன்றி வேறெதற்கு வரும்?

*

பதவி யிழந்த ஆச்சாரியாரும் சும்மாயிருக்கவில்லையாம்! பலர்மூலம் டில்லிக்கு தூதுகள் அனுப்பிக் கொண்டிருக்கிறாராம். 'உள்நாட்டிலிருந்துதான் பார்த்தாகிவிட்டது—வெளிநாடுகளிலாவது போய்ப் பார்க்கலாம்' என்ற சபலம். நிரந்தர அரசியல் தூதர் பதவி இல்லையென்றாலும், அடிக்கடி போய் வரும் பல கமிஷன்களிலாவது இடம் கொடுக்கலாமே! என்று கேட்கப்படுகிறதாம். அதுமட்டுமின்றி, எல்லோரும் நினைக்கிறபடி ஆத்ம விசாரணையில் அல்ல, அவர் ஈடுபட்டுக் கொண்டிருப்பது. அனுதினமும் காமராஜர் மந்திரி சபையைப்பற்றி 'ஆரூடம்' கணிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறதாம்! அந்தக் குழுவில் மந்திரி சுப்ரமணியமும் உண்டாம்!!

★

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரி லீடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!

திராவிடநாடு

காஞ்சி] 23—5—54 [ஞாயிறு

மோகம், அங்கே! மோசம், இங்கே!!

★

"சொல்லவும் மெல்லவும் முடியாததிலே! துடித்துப் புரள்கிறேன், படுக்கையில். என்சுந்தரரூபன், எப்படியிருக்கிறாரோ, என்கிற ஏக்கம், சதா தாக்குகிறதுநெஞ்சை! அந்தத் துயரை நான் கட்டிக் கொண்டகணவன் அறியாமலிருக்க வேண்டுமே யென்று, போர்வையை இழுத்து மூடிக்கொள்ளுகிறேன். போகுமோ, காதல்? புண்பட்டுத் தவிக்கிறது உள்ளம்! புரிந்துகொள்வாரோ, என்னை நம்பி, சொத்து சுகம் நிரம்பிய பரிமளமான வாழ்வை வழங்கிய புருஷன், என்று வாடுகிறேன்—வதைகிறேன். இமைகள், மூடவில்லை! இதே ஏக்கம் எப்போதும்! இருட்டில், கிடக்கிறேன். என்று கிடைக்கப்போகிறதோ, வெளிச்சம்!!" என்று அடுத்த வீட்டான் மீது ஆசை கொண்டிருந்து, சொத்து வருகிறதென்னும் சபலத்தால் மனதுக்குப் பிடியாதவனை மணாளனாக்கிக்கொண்ட, மங்கை படுக்கையில் புரண்டால், பாம்பாகக் குத்துகிறது அவன் நினைவு! திரும்புமிடமெல்லாம் அந்தத் திவ்யரூபன் தந்த சுகம் தெரிகிறது!!" என்று முச்சந்தியில் நின்ற வண்ணம், மூக்கைச் சிந்திக்கொண்டும் கண்களைக் கசக்கிக்கொண்டும், போவார் வருவோரிடம் புலம்பினால், அந்த போக்கற்றவளைப்பற்றி, என்ன நினைப்பீர்கள், நீங்கள்? பைத்யம் பிடித்துவிட்டதோ இந்தப்பெண்ணுக்கு!—என்றுதானே, எண்ணுவீர். அந்த எண்ணம் எழும்பியதாலேயே நமது நண்பர் ஏ. கோவிந்தசாமி, சட்டசபையிலே கேட்டாராம், நாட்டின் நிதி—கல்வி—அமைச்சர், சுப்பிரமணியத்தைப் பார்த்து!! வீதியெல்லாம் தென்றல் வீசும்போது, 'ஐயோ—அடிக்கிறதே புயல்' என்று அங்கலாய்த்தாரல்லவா? சட்டசபையில் அப்போது!!

விழியெலாம் புதுஒளி, மொழியெலாம் இன்பவெள்ளம் கொண்டு ஆனந்தப்பள்ளு பாடுகிறார்கள்; நமது மக்கள்! ஆனால் அன்பர்சுப்ரமணியம் ஐயோ, நான் என்ன செய்வேன்? லோகிதாசா!' என்று குரல் கம்ம, கண்மங்க, சட்டசபைக் காரியாலயத்தில், வேதனைவிருத்தம் பாடியிருக்கிறார். அவரது திருவாயிலிருந்து வந்த சொல்லைத் தேனமிர்தம் என நாடுகருதுகிறது! அந்தச் சொல்லைத் தந்த மனிதரோ, 'தேனல்ல; தீ!' என் கண்களைக் குருடாக்குகிறது—இதயத்தைப் பொசுக்குகிறது—என்ன செய்வதென்று யோசிக்கிறேன்! என்று முகாரி பாடுகிறார்—மூக்கைச் சிந்துகிறார். இந்த முக்யமான காட்சியைக் கண்டதாலேயே, கோவிந்தசாமி கேட்டிருக்கிறார், அமைச்சருக்கு மூளைக்கோளாறு?' என்று. தவறு! அன்பர் கோவிந்தசாமி மறந்துவிட்டார்—அமைச்சருக்கு எப்படி மூளைக்கோளாறு ஏற்படமுடியும்? மூளையைத்தான் ஆச்சாரியாரின் அத்யந்த சிஷ்யரான நாள்முதல், தியாகராயநகர் பஸ்லுல்லா ரோடில் வைத்திருக்கிறாரே! அவருக்கு எங்ஙனம் கோளாறு ஏற்படமுடியும்? காமராஜருடன் பேசுவதும், சட்டசபையில் பதில் தருவதும், 'கோவை' சுப்பிரமணியமா! அல்ல, அல்ல. அந்த சுப்பிரமணியம்போய் ஆண்டு இரண்டாகிவிட்டது. இது தியாகராயநகர் 'ரூபன்' மீது மையல்கொண்ட சுப்ரமணியம்! மணாளா! மதிவதனா! மனமோகனாங்கா என்று கள்ளத்தனமாகக் காதல் பேசுவதும், கட்டிய புருடனைக் கண்டதும், "உத்தமரே, உம்போல உண்டோ" என்று பல்லைக்காட்டுவதுமாக ஆடிக்கொண்டிருக்கும் 'பெண்டுலம்!' ஆச்சாரியார் பாஷையில் சொல்லவேண்டுமானால், அர்த்தநாரி! அங்காடி பாஷையில் இதனை 'அலி' என்று சொல்வார்கள்—அமைச்சர், ஆகவே அப்படி அழைக்க விரும்பவில்லை. அவருக்குப் பிடித்தமான புராணப் பெயரையே தரலாம், 'பிருகந்நளை'!! இத்தகையவரிடம் நிரந்தரபுத்தியை நண்பர் கோவிந்தசாமி எதிர்பார்த்தது, மறதியின் விளைவுபோலும். இல்லையென்றால், "எங்களிடம் கைவிட்டுவிட்டதாகச் சொன்னீர்; மேல்சபையில் நிறுத்திவைப்பதாகச் சொல்கிறீர். எது சரி?" என்ற கேள்வியைக் கேட்டிருக்கமாட்டார்கள், எம். எல். ஏ. நண்பர்கள்.

குலப்பெண்போல் கூவி நடிக்கும் வேசியின்வேஷம் சந்தர்ப்பம் வரும்போது வெளுத்துவிடுமல்லவா! அந்தக்கட்டம், சென்னை அரசியலில். அடடா! இந்த சுப்ரமணியம், ஆச்சாரியாரின் வர்ணாசிரமக் கல்வித்திட்டத்துக்கு வக்கீலான அழகென்ன! கச்சைகட்டிக்கொண்டு கர்ஜித்த காட்சியென்ன! ஓடோடியும் பெருமைபேசும் பிரங்கியாய் நடித்த கோலமென்ன! எதிர்க்கட்சிகளை ஏறிட்டுப்பார்த்ததென்ன! மீசையில்லாதமுகமாதலால், உதடுகளைத் துடிக்கச் செய்த விசித்திரமென்ன! தத்திக்குதித்ததென்ன! தாறுமாறுகப பேசியதென்ன! 'ஒருக்காலும் கைவிடோம்!', என்றதென்ன! 'இருந்தால் இத்திட்டத்தை நிறைவேற்றுவோம்—இல்லையெனில் வெளியேறுவோம்', என்று கூவியதென்ன!! இன்று கண்ணைக் கசக்கி, காரிருளில்கலங்குகிறேன், காதலன் இருக்கிறார் எங்கோ, கட்டிய கணவனுக்காகப் பயப்படுகிறேன், என்று ஓலமிடுவதென்ன! உளறிநிற்பதென்ன!! காணமுடியுமா, இந்தக் காட்சியை.

காமராஜர் என்னைவிட பெரிய ராஜதந்திரி என்றாராம், சுப்ரமணியத்தின் குரு, அன்றோர் நாள்.

இப்போதுதான் விளங்குகிறது—என்ன இருந்தாலும், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சுப்ரமணியத்தை, இப்படி பழிவாங்கக்கூடாது காமராஜர். துப்பியதை விழுங்கச் சொல்வதா! செச்சே, இதைவிட தூக்கு மாட்டித் தொங்கவிடலாம். துணிவுமிக்கோராயிருந்தால், 'போய்யா, போ!' என்று தலையில் துணியைப் போட்டுக்கொண்டு அப்போதே வெளியேறியிருப்பர். சுப்பிரமணியம், அப்படிப்பட்டவரா! செச்சே—அவ்வளவு அந்தஸ்தில் வைத்து எழுத, மறுக்கிறது, எழுதுகோல்—அவர், பாபம், ஆடிடும் பெண்டுலம்! ஆணுமல்ல—பெண்ணுமல்ல!!

அமைச்சர் பதவிக்காக கோவையிலிருந்து மூட்டைமுடிச்சுகளோடு சென்னைக்குக் குடியேறிவிட்டவர்!! செய்வாரோ? செய்தால், என்ன ஆவது! போய்விடுமே, மந்திரிப்பதவி!! பதவி பெரிதா—கேவலம் பலர், ஏதாவதுபேசி ஏளனம் செய்வார்களே, அதுபெரிதா. ஏளனமும் கேலியும் என்னசெய்யும்? மாதம் ரூ 1500 தருமா! அழகான பங்களா வாசம் தருமா! ஏறிச்செல்ல, கார் வசதி தருமா!! 'மானத்தைத் தருமே' என்பீர்கள், அது குலக் கொடிக்குக் கூறவேண்டிய பதில்—வஞ்சக உருவுக்கு ஏற்றதல்ல. இல்லையென்றால், துணிந்து, நிமிர்ந்து நின்று,' 'புதுக் கல்வித்திட்டத்தைசர்க்கார் கைவிடுகிறது!', என்று கூறியிருப்பாரா? கூறியது கூட, சரி! 'குப்பையில், ஏதோ, வீழ்ந்து புரண்டேன். இருட்டு நேரம். இப்போதுதான் வெளிச்சம் வந்தது. வெட்கப்பட்டேன். விவேகம் பிறந்து விட்டது எனக்கு. செய்தது தவறென்றுணர்ந்தேன். திருந்தினேன், தோழர்காள், திருந்தினேன்!', என்று செப்பலாமல்லவா? கோவை சுப்ரமணியமாகயிருந்திருந்தால் கூறியிருப்பார்! இது மந்திரி சுப்ரமணியமாச்சே!! கூறவில்லை, அப்படி.

இவர் ஏதோ மகாமேரு மலை போலவும், உலகைக்காப்பாற்றவந்த புது ஒளி போலவும், இவர் மனதில் 'பழைய கல்வித் திட்டமே பலனுள்ளது'' எனும் எண்ணம்எப்போதும் இருப்பதாகவும், 'அந்த சஞ்சீவியை இழக்கிறீர்களே, பாவிகாள்!!என்று இதோபதேசம் செய்வதுபோலவும் பேசியிருக்கிறார், சட்ட சபையில். "புதிய கல்வித் திட்டத்தை, கட்சிக் கட்டுப்பாட்டை எண்ணி கைவிட்டாலும், எனக்கு அதன்மீதிருக்கும் நம்பிக்கை சிறிதும் குறையவில்லை'' எனக்காம்! யார், இவர்? இளமைத் துடிப்பு மிகுந்த வாலிபர் என்பதைத் தவிர, சிலகாலம் ஆச்சாரியாருடன் சுற்றியதால் அதிமேதாவி எனும் அகந்தைக்கு இடம் கொடுத்தவர் என்பதைத்தவிர, வேறென்ன இருக்கிறது 'எனக்கு' என்று கூற! 'இந்த நாட்டின் பிரஜை' எனலாம். உண்மை, அந்தப் பிரஜையின் நிலையிலிருந்தால், பேசலாம்—சரியுங்கூட. பிரஜைகளையாளும் பீடத்திலே உட்கார்ந்துகொண்டு, அந்தப்பீடத்தை அலங்கரிக்கும் கட்சியிலே அமர்ந்துகொண்டு, அந்தக்கட்சியின் இச்சையைத் தட்டாமல் பதவிப் பிச்சையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமெனும் 'பெண்டுலமாக' இருந்துகொண்டு, 'எனக்கு! எனக்கு!!' என்று பேச, இவர்யார்? ஹிட்லரா! அல்லது முஸோலினியா!!

பொன்னொளி சிதறும் புனிதர் இவர், என்று நாடு கருதவில்லை, இவரைப்பற்றி; நல்லோரிடையிலும் பெயரெடுக்கவில்லை கோபக்காரர்!! அனுமார்!!—என்று, ஆச்சாரியாராலேயே வர்ணிக்கப்பட்ட சீடர். அத்தகையவர் 'எனக்கு' நம்பிக்கையுள்ள திட்டம்—எனச் செப்புகிறார். காதல் அடுத்த வீட்டு ஆடவன்மீதென்றால், அவனையடைந்து கொஞ்சி மகிழட்டும், ஆனால் அவனிடம் அதிகாரம் இல்லை—[illegible] இல்லை—கார் இல்லை—வசதி இல்லை — ஆகவே பிடிக்காதவனை கட்டிக்கொள்கிறேன்! ஆனால் பிரியத்தைமட்டும் அங்கே வைக்கிறேன்!! — என்றால், பேதையும் விரும்பான், அந்த பேதமதி கொண்டவளை. ஆனால், அமைச்சர், கூறுகிறார்! குரல் கம்முகிறதாம்—ஒலி, தடுமாறுகிறதாம்—இரவு முழுதும் தூக்கமில்லையாம் — இருட்டாகத் தென்படுகிறதாம், எங்கும்—கட்சிக் கட்டுப்பாட்டை காப்பாற்றுகிறாராம் — அதனால் புதிய கல்வித் திட்டத்தைக் கைவிடுவதாகச் சொல்கிறாராம்—பொற்காலம் ஒன்று வரலாமாம் — அப்போது இத்திட்டம் ஆலோசிக்கப் படலாமாம்—அக்தக்காலம் வரும் என்பதை எதிர்பார்க்கிறாராம்—அதனாலேயே புதிய கல்வித்திட்டம், நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாக'க் கூறுகிறாராம்! கன்னக்கோலேந்தி காரிருளில் திருடப்புகுந்து, கையும் மெய்யுமாய் பிடிபட்ட கள்ளன், உளறுவானே, அவனையும் மிஞ்சுகிறார் இந்த அற்புத மனிதர்!!

'கொள்கை பிடிக்கவில்லை—போய் வாரேன், ஐயா' என்று டில்லிபீடத்தில் அமைச்சராயிருந்த பாபா என்பார் முன்போர்முறை போன காட்சியினைக் கண்டிருக்கிறோம்! தேஷ்முக்,கூட அண்மையில் அவ்விதம் செப்பி, விலகிட முயன்றாராம்! அதுதான் முறை. ஆட்சிவண்டியில் பூட்டப்பட்ட மாடுகளில் ஒன்று சண்டித்தனம் செய்யும் சுபாவம் உடையதென்றால், ரோடு எவ்வளவு சுகமாயிருந்தாலும், வண்டி எப்படி நகரும்! வண்டிக்குள்ளிருப்போரின் கதிதான் என்னாகும்!!

எனக்காம், எனக்கு!—அவ்வளவு பெரிய கருத்துச் சுதந்திரத்தை விரும்பும் இந்தக் காந்தீயவாதி கட்சிக் கூட்டத்தில், தன்னுடைய கொள்கையை நிலைநாட்ட, 'குத்து வெட்டு' நடத்தியிருக்கவேண்டும். அதை விடுத்து பொது மன்றத்தில் நின்று, பொங்குகிறது வருத்தம், கண் கலங்குகிறேன், தூங்காமல் துக்கப்படுகிறேன் என்று ஆலோலம் பாடினால், என்னவென்று கருதுவது இதனை!

அன்பர் சுயம்பிரகாசத்துக்குப் பதிலளித்தாராம், சபையில்—"என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லுகிறேன். தனிப்பட்டவர்களின் அபிப்பிராயத்தை வெளியிடும் உரிமை இருப்பதே ஜனநாயகத்தின் முக்கியதத்துவமாகும்'' என்பதாக.

தத்துவ விளக்கம் தருகிறாரே, இத்தயாபரர்! நாடு முழுமையுமே வேண்டாமென்று முரசொலித்த போது, எங்கேபோயிற்று, இந்த ஜனநாயகம்? வேண்டாம், வீசியெறி இத்திட்டத்தை — என்று சட்டசபையே தீர்மானம் செய்

ததே, அதன் பிறகு இந்த சுப்ரமணியம் செய்ததென்ன? ஜனநாயகம் சம்மட்டி அடி கொடுத்தது! தவறோ சரியோ—ஜனநாயகத் தீர்ப்பை அமுல் நடத்துவதே அழகு—என்று, உடனே கல்வித் திட்டத்தைக் கைவிட முன்வந்தாரா இந்த சுப்ரமணியம்! தாறுமாறான விளக்கங்கள் தந்ததென்ன! சங்கூதிபோல் இட்ட முழக்கமென்ன! ஜனநாயகத்தைக் காலடியில் போட்டு, 'தாம்! தீம்!' என்று நடனமாடிய இவர், இப்போது கூறுகிறாராம், ஜனநாயகத்தின் தத்துவம் பற்றி! நாட்டிலிருப்போரை மூடர்களென்றெண்ணும் முரட்டுமதி, ஆச்சாரியாரோடு போய்விட்டதென நம்பினோம் — அவருக்கு வாரிசு நானிருக்கிறேன், என்று கூறுகிறார், இவர்! ஜனநாயகம் என்பது, கட்சிக்குள்ளேயே விமர்சனம் செய்து முடிவுகட்ட வேண்டிய விஷயம். ஒரு கட்சியின் பொறுப்புள்ள அமைச்சர்! அந்தக் கட்சி அரசாங்கத்தின் முடிவுகள், முச்சந்திகளிலே அல்ல, கட்சிக் கூட்டத்திலே முடிவு செய்யப்படுகின்றன!! அந்த இடத்தில், தன்னுடைய கருத்தை வலியுறுத்த வேண்டும்—கட்சி ஏற்கவில்லையென்றால், பெரும்பான்மையான முடிவை ஏற்கவேண்டும் — அதற்கு மனச்சாட்சி இடம் கொடுக்கவில்லையென்றால், 'இதோ! என் கிரீடம். என்னை விட்டுவிடுங்கள்; மனச்சாட்சி மறுக்கிறது' எனக் கூறி விலகிவிடவேண்டும். அதனை விடுத்து, அப்படிச் செய்தால் மந்திரிப்பதவி போய்விடுமே என்று பயந்து, தில்லானா பாடுவதும், திகைக்கிறேன் எனச் செப்புவதும், கறையைப் போக்காது! சுயரூபத்தையே விளக்கும்!!

'வேஷம் வெளிப்பட்ட' காட்சியைக் காண்கிறோம், நாம். விஷ வாடை போயிற்றென்று அக மகிழ்ந்து, அன்பர் காமராஜருக்கு நாட்டின் பாராட்டுதலைத் தெரிவிக்கும் இந்த நல்ல சமயத்தில், கூடயிருந்து குடிகெடுக்கும் இந்தக் 'குணவதி'யின் ரூபத்தை எடுத்துக் காட்டவும் விரும்புகிறோம்.

பாம்பினை மடியில் கட்டிக்கொண்டு பயணம் கிளம்பார், எவரும்! துரோகியைத் தோழனாகக் கொண்டு துயரமிக்க வேலையில் ஈடுபடத் துணியார், விவேகிகள்!! ஒரு வேளை 'திட்டத்தைக்கக்கிய சுப்பிரமணியமே அதனை எடுத்து விழுங்கவும் வேண்டும். எனும் ராஜதந்திரம் காரணமாக இத்துணை நாளும் காமராஜர், அவருக்கு இடம் தந்து வந்திருக்கலாம். இனியும், இத்தகையோரை நம்பி, ஆட்சித் தேரை ஓட்டிச் செல்ல முயல்வது, ஆபத்தென்றே கூறுவோம். அலைகடல், எங்கும்! ஆச்சாரியம் எனும் சுறா, வாய் பிளந்து நிற்கிறது! அவர் பரம்பரையின் ஏடுகள், எப்போது — எப்போது. என்று ஜாதகம் கணிக்கின்றன! இத்தகைய சூழ்நிலையில், மடியிலேயே பாம்புகளை வைத்துக்கொண்டிருப்பது, விபத்தையே உண்டாக்கும்.

இதனை, காமராஜரின் கவனத்துக்கு, களிப்பு மோதும் இவ்வேளையில், கொண்டுவர விரும்புகிறோம்—விஷயம் அவர்களுடையது. எனினும், நமக்கு வேகம் பிறப்பது, அரசியல் வாழ்வில், பதவிக்காக 'அர்த்தநாரீஸ்வரர்' வேடம் தாங்கும் ஆசாமிகளின் கும்பலை வளரவிடுவது கூடாது எனும் பொது நோக்கால். சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி நாக்கையும் இருதயத்தையும் வளைத்து, வாழ்வில் சுகபோகத்தைமட்டும் குறிக்கோளென நம்பி நடந்து செலலும் மனிதர்களால், பொதுவாழ்வு சிறப்படையாது! புனிதமான அப்பாதை கறைப்படும்!!

காங்கிரஸ் ஆட்சியில் கண்ட பலன், அரசியல் வாழ்வில் 'ஆஷாடபூதி'களைச் சிருஷ்டிக்கச்செய்தது—எனும் மீளாக பழி, உருவாகியிருக்கிறது. மந்திரிப் பதவி! —என்றால், மனிதத் தன்மையை மறப்பதும், செய்நன்றி கொல்வதும், இருதயத்தை இரும்பாக்கிக்கொள்வதும், கொள்கையை விற்பதும், கோணல் மதி கொள்வதும், சாதாரணமான விஷயங்கள் எனும், பாதை வகுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாதையைப் பெரிதாக்கினார், அன்பர் ஆச்சாரியார்! அந்தக் கேடு, காமராஜர் ஆட்சியிலும், தொடர்வது ஆபத்து! ஆபத்து!!

தனி மனிதன், தன் சுயநலவாழ்வுக்காக, இருதயத்தை விற்குமளவுக்குத் துணிவு கொள்கிறான் என்றால் அத்தகைய நயவஞ்சகம், நாட்டில், கிள்ளியெறியப்படவேண்டும். ஆசை, அயலான் மீது! ஆனால் மனைவி, இன்னொருத்தனுக்கு!! —எனும், அநாகரீகம், வளர்வதை யாரும் விரும்பார். ஆனால், காங்கிரஸ் அரசியலில், அது வளர்ந்து வருகிறது!! இக்கேட்டினை ஒழிக்க, தலைவர்கள் முன்வரவேண்டும். அந்தப்பண்பு, காமராஜர் போன்றோருக்கு அரும்புவது, நல்லது. ✡

"லண்டன்" சிரிக்கிறது!

சினிமாவா!

எங்கே, கத்தரிக்கோல்?

நாடகமா!

அனுமதி கொடுக்காதே.

ஏடுகளா!

தடைபோட முடியுமா, பார்!

பேச்சா!

ரகசியப் போலீசை அனுப்பு.

*

சுதந்திர ஆட்சியிலே, இந்தச் சுகத்தை அனுபவித்து வருகிறோம் நாம்! நம்முடைய 'எண்ணங்களை' கண்டு, இன்றுள்ள ஆதிக்க பீடத்தவர் அஞ்சுவதைப்போல், அகில உலகிலும் எந்த அரசுக்கும் அச்சம் இருக்காதுபோலிருக்கிறது. திராவிட இயக்கத்தாரின் செயல்!—என்றால், அரசினர்மட்டுமல்ல, சில சமயங்களில் அரசினை எதிர்க்கும் கூட்டத்தினர்கூட, அவர்களோடு சேர்ந்து நம்மை வாட்டிடும் வழிகளைக் காண்பதில், ஆவலும் சிரத்தையும் அதிகமாகக் காட்டுகின்றனர்.

"ஏ! அப்பா! ரொம்ப மோசம்"

"இப்படியா, எழுதுவது?"

"காரம் அதிகம் பேச்சில்!"

"சர்க்காரே! தூங்குகிறாயோ?"

"சட்டங்களை வைத்திருக்கிறாயே எதற்கு?"

என்று, புறப்படும் அம்புகள் ஆயிரமாயிரம்! அடிக்கப்படும் தந்திகள் ஏராளம்! மகஜர்கள் தொகை கொஞ்சநஞ்சமல்ல!! அத்தகைய செயலில் ஈடுபடுவோர் சாதாரண காலங்களில் எழுத்துச் சுதந்திரம் பேச்சுச் சுதந்திரம்பற்றி எழுப்பும் கர்ஜனைகளில், அனல் தெறிக்கும்—ஆகா! ஊகூ! என்று கூறுவர், கொக்கரிப்பர். ஆனால் நமது விஷயம் என்றால், அரசைத் தூண்டுவர்! கை கொடுப்பர்!!

இத்தகைய ஆசாமிகள், இங்கு மட்டுமல்ல, இங்கிலாந்திலும் இருந்தார்களாம் — சரிதம், பேசுகிறது. தாறுமாறான காரியங்களில் ஈடுபட்டு வெறியாட்டம் ஆடினான், முதலாம் சார்லஸ் எனும் மன்னன். அவனுடைய ஆட்சியிலே, ஆட்சியைக் கண்டித்துப் பேசியோரைத் தண்டிக்க 'நட்சத்திர சபை' எனும் ஒன்றை நிறுவியிருந்தானாம். இந்தச் சபையை இடித்துத் தரைமட்டமாக்கவேண்டும்! சார்லஸை வெட்டி வீசவேண்டும்!! — எனற் முழக்கத்துடன்தான், சார்லஸை எதிர்த்தனர் மக்கள். வெற்றியும் பெற்றனர்! சார்லஸ் வீழ்ந்த பிறகு, அவனுடைய மகன் அரியாசனத்தில் ஏற்றப்பட்ட சின்னாட்களுக்கெல்லாம் இங்கிலாந்தின் பிரபுக்கள், அவனுக்கு வேண்டுகோள் சமர்ப்பித்தனராம் — 'மன்னா! நட்சத்திர சபையிருந்ததுபோல், நமக்கும் ஒரு சபை வேண்டும். அப்போதுதான், நமது எதிரிகளின் வாயைப் பூட்ட முடியும்' என்பதாக. இதே பிரபுக்கள்தான், முதலாம் சார்லஸை ஒழிக்க உதவி செய்தவர்கள். 'நட்சத்திர சபையா! அக்கிரமம்!' என்று கூவியவர்கள். பதவிபீடத்தில் அமர்ந்ததும், தமது இடத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் நிலையில், துப்பிய எச்சிலைத் தாம்பூலமாக்கும் ஆசைகொண்டனர். அவர்கள், பிரபுக்கள்! இங்கும், இப்போது 'பழைய முறை' நீடிக்க வேண்டுமெனச் செப்புவோர், பிரபுக்கள்தான்!! இங்கிலாந்திலிருந்த பிரபுக்களுக்கு, ஏழைகள் அல்லது மாற்றுக்கட்சிக்காரர்கள் மட்டுமே—எதிரிகள். அதேபோல, மாற்றாருக்கும் அந்தப் பிரபுக்கள் மட்டுமே, எதிரிகள். இங்கோ, பிரபுக்கள் ஒரு வகையில் இல்லை! பிரபுக்கள் இரண்டுவிதம், இங்கே!! பொருளாதாரத்துறையில் ஒரு பிரபுத்துவம்—சமூகத் துறையில் மற்றோர் பிரபுத்துவம். இந்த இரண்டு பிரபுக்களையும், எதிர்க்கும், இருதய ஒலி நமது எண்ணங்கள்! அதனால்தான், நாடகமா, கூடாது:—சினிமாவா? எப்படியாவது தடைபோடு!—எழுத்துக்களா? வளரவிடாதே! என்று, வரிந்து கட்டிக்கொண்டு புறப்படுகின்றனர். இந்த வக்கிரமங்களின் கூட்டுச் சந்தையாக இருக்கிறது, இன்றுள்ள அரசு! பேனா அசைந்தால் போதும். துப்பாக்கியை எடுத்துக்கொண்டு, தேட ஆரம்பித்து விடுகிறது.

இந்தத் துர்பாக்கியநிலையால், நாம், அடிக்கடி துளைக்கப்படுகிறோம்—ஏதோ, நாடகம் நடிக்க திண்டாடவேண்டிய நிலை — நாம் பேனாவைப் பிடிக்கும்போதே என்ன நேருமோ என்று ஏங்கக்கூடிய கட்டம். இப்படியொரு வேதனை, இங்கிலீஷ்காரர்களின் ஆட்சியின்போது, இன்று அரசாளும் அன்பர்களுக்கு அடிக்கடி ஏற்பட்டதுண்டு. அப்போது, அப்பப்பா! என்னென்ன சொன்னார்கள், இந்தத் தேசியத் தலைவர்கள்.

"வெறியன்!"

"ஐயோ! எழுத்துச் சுதந்திரம் பறிபோகிறது"

"நாடகம் கூடாதாமே!"

"'தியாக பூமி'க்குத் தடையாமே!"

'மாத்ருபூமி வெளிவரக்கூடாதாமே!"

என்று பதறினோர் ஏராளம்! பேனாக்களைத் துப்பாக்கிகளாக்கியோர்தான், ஒவ்வொரு தேசிய ஆசிரியரும். அவர்கள், அப்போது, வெள்ளை ஏகாதிபத்தியத்தின் கிறுக்குத்தனம்பற்றி எழுதாத நாள் கிடையாது—'எப்படி நடத்துவது பத்திரிகையை? இப்படி சட்டங்களைப் போட்டு கொட்டுகிறானே, இந்த வெள்ளையன். கண்டனத்தின் அறிகுறியாக நான் பத்திரிகையை நிறுத்துகிறேன்' என்று 'தினமணி' தன்னுடைய வெளியீட்டையே நிறுத்திக் காட்டிற்று. அந்தளவுக்குக் கண்டித்தனர்! தவறல்ல, அவர்கள் கண்டனம் — தடி தன்னிடம் இருக்கிறதென்னும் தைரியத்தில், தட்டுப்பட்டோர் தலையில் எல்லாம் குட்டிக்கொண்டே இருக்கும் குறுமதியாளனை, யாரே சகிப்பர்! கண்டித்தனர், காங்கிரஸ்காரர்கள்.

அந்தக் காங்கிரஸ்காரர்களை, இன்று, வெள்ளையன் கேலியோடு பார்க்கிறான் — "வீராதி வீரனே! சூராதிசூரனே! எங்கே போயிற்று உனது முழக்கம்? நான் வீசியெறிந்த தோட்டாக்களைப் பொறுக்கி நீயும் விளையாடுகிறாயே!" என்று ஏளனத்தோடு பார்க்கிறான். சுயராஜ்ய போராட்ட காலத்தில், இந்தச் சுதந்திரவீரர்கள், மனித உரிமைகள் பற்றி என்னென்ன முழக்கமிடுவார்களோ அவைகளை விட அதிகமான ஆதாரங்களைக் காட்டி, நூல்வெளியிடுகிறது, வெள்ளைய அரசாங்கம்.

அண்மையில் பிரிட்டிஷ் அரசு, 'பிரிட்டனில் கருத்துரிமை' எனும் தலைப்பில், சிறிதோர்வெளியீட்டினை பிரசுரித்திருக்கிறது. இங்குள்ள பிரிட்டிஷ் தூதராலயம் அதனை எல்லோருடைய பார்வைக்கும் அனுப்பி வைத்திருக்கிறது. அரசு பீடத்திலிருப்போரும் அவர்தம் தாங்கிகளும் கூட, அதனைக் கண்டிருக்கலாம். அந்த வெளியீட்டில், எழுத்துரிமை—பேச்சுரிமை—எண்ண உரிமை—திரைப்பட உரிமை, என்று பிரித்து ஒவ்வொரு துறையிலும் பிரிட்டிஷ் மக்கள் அனுபவிக்கும்சுதந்திரங்களை யெடுத்து விளக்கியிருக்கிறது— "ஏதேதோ பேசினார்களே, இந்தக் காங்கிரஸ்காரர்கள்! இதோ, எங்கள் நாட்டினைப் பாரீர். இந்தளவு சுதந்தரத்தோடு வாழ்கிறார்கள். இருக்கிறதோ உங்கள் சுயராஜ்யபூமியில்!" என்று கேட்பது போல.

"மனிதன் மிருகத்தைவிட உயர்ந்தவன். அவனுக்கென்று சிலவிசேஷ உரிமைகள் உண்டு! அந்த உரிமைகளைப் பெறுவதற்காக எங்கள் மூதாதையர் பட்ட கஷ்டங்கள் ஏராளம். அடிமை வாழ்வினின்றும் எங்

களை மீட்க அவர்கள் சிந்திய இரத்தம் ஏராளம்! ஈடுபட்ட சண்டைகள் பல! அடிபிடித் தகராறுகள் ஆயிரம்! நீதி மன்றங்களிலே நிறுத்தப்பட்டதும் உண்டு! நெருப்புக் குண்டங்களிலே தள்ளப்பட்டதும் உண்டு! இவைகளையெல்லாம் அனுபவித்து, எங்கள் முன்னோர், பல சுதந்திரங்களைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள்'' இப்படி, ஆரம்பமாகிறது, அந்தக் கட்டுரை! சுதந்திரத்தைப் பெறப் போராடியவர்கள் தான் தாங்கள்—அந்தப் போராட்டங்களை மறந்திட மாட்டோம்—அது போலவே, போராட்டங்களின் முடிவில் கிடைத்த சுதந்திரப் பரிசுகளின் பெருமையையும் உணராமல் கெட்டுவிடமாட்டோம் — என்று கூறுகிறார்கள். யாருக்கு?—கூறவில்லை; அவர்கள்! ஆனால், குறிப்பிடுவது யாரை—என்பது, கூறாமலே விளங்கும்! அந்தக் கட்டுரையில், மனித இனம் உரிமையுணர்ச்சி பெற என்னென்ன இடையூறுகளைத் தாங்க நேரிட்டது — என்பதை, தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. "அறியாமை மூடநம்பிக்கை எனும் சம்மட்டி அடிகளைத் தாங்கிக்கொண்டு விஞ்ஞானம், விசித்திரமான பல உண்மைகளைச் சொல்லியிருக்கிறது! இன்று பாமாலையும் பூமாலையும் சூட்டுகிறோம், விஞ்ஞானிகளுக்கு ஆனால் அன்று! மரண தண்டனையும், சிறைவாசமும் வழங்கப்பட்டிருக்கிறது. அவைகளைத் தாண்டியே அறிவுச் சுதந்திரத்தைப் பெற்றது, இந்த மனித சமுதாயம். எழுத்தறிந்து படித்திடும் சுதந்திரம், எல்லோருக்கும், கிடைக்கும்படிச் செய்திருக்கிறோம், நாங்கள்.

சுதந்திர உரிமைகளைப் பெற நாங்கள் பல தியாக கட்டங்களைத் தாண்டியிருக்கிறோம். அவைகளை நிலை நாட்ட சட்டங்கள் இருந்தால் மட்டும்போதாது—ஏட்டளவில் எழுதப்பட்டுவிட்டால்மட்டும் பயனில்லை; அவைகளை இதயத்தில் ஏற்றுக்கொள்ளவேண்டும், அவைகளை மதித்து நடக்கும் பக்குவத்தையும் பெறவேண்டும்''

வெள்ளையர் தரும், விளக்கம் இது! சுதந்திர உரிமைகளைப் பெற செய்த தியாகங்கள் சுட்டிக் காட்டப்படுகிறது—அடைந்த இன்னல்கள் விளக்கப்படுகிறது — அதனைக் காப்பாற்றுவோரிடம் இருக்கவேண்டிய பண்புகளும் உணர்த்தப்படுகிறது.

காங்கிரஸ்மா, அந்தப் பண்பை, இன்றுள்ள ஆதிக்கப்புரியிடம்! கஷ்டம் நஷ்டமடைந்து பெற்றசுதந்திர உரிமைகளை அனுமதிக்கும் பண்பு இருக்கிறதா, இங்கே!! எத்தனையெத்தனை அடக்குமுறைகள் — எத்தனை தடவைகள் 123-A வீசப்பட்டது நம்மீது — தடை செய்யப்பட்ட நாடகங்கள்—போடப்பட்ட 144கள் — சிறைச்சாலையும் திறந்திடப்பட்டது — தூக்கிய கத்திரிக்கோலை இன்னும் கீழே வைக்கவில்லை—என்னென்ன அட்டகாசம்! எவ்வளவு வெறியாட்டம்!!

"இஷ்டம்போல் எழுதினால்விட்டுவிடமுடியுமா?''

"சுதந்திரம் என்பது, 'தீவட்டி தூக்கி திருடச் செல்லப்பா' என்று கூறுவதில்லை''

"சட்டவரம்பை மீறினால், சும்மா விட முடியுமா!''

தேசிய பீடம். செப்பும், பதில்கள் இவை! மக்கள், சுதந்திர உரிமைகளைத் துஷ்பிரயோகம் செய்வதாலேயே அடக்குமுறைகளை வீச நேரிடுவதாகத் தெரிவிக்கின்றனர்—உண்மையா, அது! அதற்கும் பிரிட்டிஷ் வெளியீடே, விளக்கம்சொல்லுகிறது.

"சில சமயங்களில், தனிப்பட்ட சுதந்திரங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று சொன்னால், சந்தர்ப்பத்தை அனுசரித்து நடக்க, மக்கள் மறுப்பதில்லை. போர்க்காலத்தின்போது, ஏராளமான கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தோம். இவ்வளவுதான் உணவுப் பொருள் தரமுடியும் — இத்தனை மணி நேரம்தான் விளக்கெரிக்க வேண்டும் — வெளிச்சம் வெளியே தெரிந்தால் தண்டனை — அபாயச் சங்கு ஊதியதும் பதுங்குமிடத்துக்குப் போய்விட வேண்டும்—இப்படி எத்தனையோ கட்டுப்பாடுகளை விதித்தோம்! அவைகளின் அவசரத்தன்மையை உணர்ந்து நடந்துகொண்டார்கள் மக்கள்''

மக்கள், மிருகங்களல்ல! சுதந்திரம் என்றால் வழியில் செல்லும் மாதைக் கைப்பிடித்து இழுப்பதும் தானே! — என்று கேட்கும் அவ்வளவு மதிகெட்டவர்களல்ல. அவர்களுக்கும் பொறுப்பு தெரியும் — என்று கூறுகிறது வெள்ளையர் வெளியீடு! நல்ல பதில், இங்குள்ள நாடாள்வோருக்கு!! நாம் சொல்லி வந்த பதில்—பிரிட்டிஷ் வெளியீடு பேசுகிறது, இப்போது. குஷ்டரோகி, குணவானுகிறான்! குணவான் குஷ்டரோகியானதைக்கண்டு பரிகசிக்கிறான்!!

எமது நாட்டில், எழுத்துச் சுதந்திரம் உண்டு. அதை நசுக்கும் தந்திரம், எமது ஆட்சியில் கிடையாது.

பேச்சுச் சுதந்திரம். உண்டு. 144 போடும், பித்துமதி, எம்மிடம்இல்லை.

திரைப் படங்களைத் தணிக்கை செய்கிறோம், நாங்கள்; தணிக்கை என்ற பெயரால், குரலை நெறிக்கும் குறுமதியுடனல்ல, எமது தணிக்கை போர்டு இருப்பது.

காலம் மாறுகிறது! அதையொட்டி நாங்களும் மாறிவிட்டோம்.

இவ்விதம், சர்ச்சிலின் சர்க்கார் கூறுகிறது! சர்ச்சிலை எதிர்த்துப் போராடிய பண்டிதர் சர்க்காரோ, துப்பியதை விழுங்குகிறது!!

அண்மையில் பத்திரிகைகளின் குரலை ஒடுக்கும் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது.

நாடெங்கும் 7 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பமான 144 கள் இன்னும் முற்றுப் பெறவில்லை.

தணிக்கைபோர்டு என்றபெயரால், ஒரு தனி மனிதன்கையில் கத்திரிக்கோலைக் கொடுத்து, தாறுமாறு செய்கிறது.

நாடகம்!— என்றால், நடுக்கம்.

சினிமா!— என்றால், கிலி.

பேச்சு!— என்றால், பெருமூச்சு.

எழுத்து!— என்றால், இதய வேதனை.

இப்படியிருக்கிறது, 'நம்ம' சர்க்கார்! சுயராஜ்ய சர்க்கார்!!

இதன் அழகை சுட்டிக் காட்டுவதுபோல், பிரிட்டிஷ் அரசு, மனித உரிமைகளை விளக்கி, வெளியிடுகிறது, ஏடு.

விசித்திரமான மாறுதல்! வெட்கப்பட வேண்டிய மாறுதல்!!

★





மாளிகை சேர்ந்தான்

சென்ற ஆண்டு அவனுடைய வாழ்க்கையிலே ஒரு திடீர் மாற்றம் ஏற்பட்டது.

டிரைவர் கந்தசாமி 'ஞானம் பிரா பஸ் சர்வீஸை' விட்டுவிலகி கார் ரிப்பேர் ஷாப் ஒன்று திறந்தான். அந்த ஷாப்பிலே கிளீனர் வேலை ஆறுமுகத்திற்குக்கிடைத்தது.

ஆனால் ஊதியமில்லாத வேலை! கந்தசாமி நினைத்து, மனமிருந்தால் ஒரு நாலணா, எட்டணா கொடுப்பான். மற்றப்படி சாயாவும் பீடிக் கட்டும் தவிர வசதிகள் எதுவும் பெறமுடியாத வாழ்க்கைதான் ஆறுமுகத்தின் வாழ்க்கை. பாதி நாட்களுக்கு அந்த ரிப்பேர் ஷாப்பின் நடைபாதைதான் ஆறுமுகத்தின் தூங்குமிடமாக இருக்கும்.

குடிசைக்கு வந்தால் அவன் தாய் அஞ்சலையின் கடுஞ் சொற்களுக்கு அவனால் பதில் கூறமுடியாது. 'சோம்பேறி' 'காலி' 'ஏமாளி' இப்படி இன்னும் அதிகமான பட்டம் தான் கிடைக்கும்.

அவைகளைப்பற்றிக் கவலைப்படாமல் பீடியைப் பற்ற- வைத்துக்கொண்டு, அவன் தங்கை செங்கமலம் ஏதாவது காசு சம்பாதித்து வைத்திருந்தால் அதைத்திருடிக் கொண்டு கிளீனர் வேலை செய்ய வந்துவிடுவான் ஆறுமுகம்.

கடைசியாக ஆறுமுகத்திற்கு வாழ்க்கையிலே மாற்றமேற்பட்டது.

கார்களைத் துடைத்து,கழுவித் தள்ளிவிட்டுக்கொண்டிருந்த ஆறுமுகத்தின்மீது கருணை வைத்து கார் ஓட்டவே கற்றுக் கொடுத்தான் டிரைவர்கந்தசாமி.

பழகிக்கொண்டே இருந்த காரணத்தினால் வெகு சீக்கிரத்தில் நன்றாகவே கார் ஓட்டக் கற்றுக்கொண்டான் ஆறுமுகம். போலீஸ் லைசென்ஸும் கிடைத்தது.

இதை அறிந்த அஞ்சலை அடுத்த நாளே ஆலை முதலாளி உத்தமநாதரின் பங்களாவில் நுழைந்துவிட்டாள். வாயிற்படியிலேயே உத்தமநாதபிள்ளையின் எஸ்டேட் மானேஜர் சாம்பசிவம் நின்றுகொண்டிருந்தார்.

"என்னடி, மாரி பொண்டாட்டிதானே, நீ!" என்றார் சாம்பசிவம் அவளைக் கண்டதும்.

"ஆமாங்க, சாமி! கும்புடேருனுங்க......" என்று கூறியவண்ணம் விழுந்து எழுந்தாள், அஞ்சலை.

"என்னடி, விஷயத்தைச் சொல்லு" என்று கூறிக்

கொண்டே கண்ணாடியை கழற்றி கூட்டிற்குள் போட்டார் சாம்பசிவம், அஞ்சலை பயத்தோடு 'சாமி!' என்றாள்.

இதற்கு பதில் கூறவேண்டியது அவசியமற்றது என்று "என்ன"?" என்று கேட்கும் தோரணையில் தலையை அசைத்தார், மானேஜர் சாம்பசிவம்.

"நம்ப பையன், அதாங்க மாரி மகன் ஆறுமுகம் — இப்போ கார் ஓட்டக்கத்துக் கொண்டிருக்கிறானுங்க. நம்ப எஸ்டேட்டிலே ஐயா மனசுவைத்து ஒருவேலை கொடுக்கணுங்க......" என்று கூறி அந்தகனவான் என்ன பதில் கூறுவாரோ என்று எதிர்பார்த்து நின்றாள்.

"கார் ஓட்ட......" என்ற வார்த்தைகளைக் கேட்டதும் மானேஜர் துள்ளிக்குதித்தார். "யார் உன் பயலா......ஆறுமுகமா!"

"ஆமாங்கோ சாமி! எங்காவது பார்த்து சேர்த்துடுங்க, சாமி!" என்றாள் அஞ்சலை, பயத்தோடு.

"பார்க்கலாம். நாளை காலை பத்துமணிக்கு அவனை இங்கேவரச் சொல்லு......!" என்று கூறிவிட்டு கையில் எடுத்த சுருட்டைப் பற்ற வைத்தார் சாம்பசிவம்.

அஞ்சலைக்கு ஆனந்தம், "அப்படியேஆகட்டும், சாமி! ஏழை ஏதோ பிழைக்க வழி செய்யுங்கோ! நான் போறேன், சாமி! கும்பிடேருனுங்க, சாமி!" என்று மறுபடியும் விழுந்து கும்பிட்டு விட்டுச்சேரிக்கு ஓடிவந்தாள் அஞ்சலை.

அன்றிரவும் அலைந்து திரிந்து பிடிக்கட்டோடு வந்த ஆறுமுகத்திற்கு இந்த சந்தோஷச்செய்தியை அறிவித்தாள் அஞ்சலை.

"மானேஜர் பொல்லாதவரு, ஆமாண்டா, அவர் கேட்டா பதில் சொல். மற்றப்படி அந்த பங்களாவுக்குள் ஒரு வார்த்தை பேசக்கூடாது. தூசி துரும்பைக்கூடயாருமில்லையேன்னு எடுக்கக்கூடாது, பொய்யே சொல்லாதே. மானேஜர் எப்படியும் கண்டு பிடிச்சுடுவாரு. மரியாதையா நடக்கணும்" என்று அவளுக்குத்தெரிந்த அறிவுபதேசங்களையெல்லாம் இரவு நீண்ட நேரம் கூறினாள் அஞ்சலை.

ஆறுமுகத்திற்கு அதில் எதுவுமே புரியவில்லை. என்னமோ கேட்டுக் கொண்டே தூங்கிவிட்டான்.

*

அந்த மெயின்ரோடின் மேல் நின்றுகொண்டு தான்வாழும் சேரியைப் பார்த்தபோது இந்தக் கடந்த கால விஷயங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அவன் ஞாபகத்திற்கு வந்தன!

பெரிய பங்களா—ஆலைமுதலாளி—மானேஜர்—பெரிய மனிதருக்கு கார்ஓட்டுவது இவைகள் அவனுக்கு தெரியாத விஷயங்கள் மாத்திரமல்ல—சிந்திக்கவும் முடியாதவை.

தன்தைரியத்தையெல்லாம் வரவழைத்துக் கொண்டு, அந்த ஆலை முதலாளியின் "பாக்ய பவனத்"தில் வேலை பார்த்துவிடலாம்—பார்க்கப் போனால், தந்தை வேலை பார்த்த இடம்தானே என்ற எண்ணத்தில் புறப்பட்டான்.

மெயின்ரோடில் சிறிது தூரத்தில் நாயரின் டீகடை இருந்தது. செங்கமலத்திடம் பறித்த எட்டணாவை எடுத்து கையில் கெட்டியாகப்பிடித்துக்கொண்டு உள்ளே நுழைந்தான்.

இரண்டு இட்லி, குருமா சாப்பிட்டு ஒரு டீ சாப்பிட்டான்.

அநேகமாக அவன் வாழ்க்கையிலேயே அதிக சுவையோடும், நல்ல உணவு என்ற மனத்திருப்தியோடும் சாப்பிடும் உணவு இவைகள்தான்.

நாயர் கடையில் ஐந்தணா போக மீதி இருந்தது, மூன்றணா. பீடி வாங்கியது 2 அணா போக மிச்சம் ஓர் அணா!

பையில் ஓர் அணாவோடு மலையடிவாரத்திலே இரண்டு மைல்களுக்கப்பால் இருக்கும் 'பாக்யபவனம்' நோக்கி நடந்தான். கிட்டத்தட்ட ஒருமணி நேரம் கழித்து நந்தவனமாக காட்சியளித்த அந்தபிரமாண்டமான மாளிகை வாயிற்படியில்வந்து நின்றான்!

"பாக்ய பவனத்தின் வாயிலைத் தாண்டி உள்ளே நுழைந்தான் ஆறுமுகம்.

இதுவரை அவன் அனுபவித்திராத பயங்கர உணர்ச்சி அவன் கால்களைப் பின்னியது.

அந்த மாதிரி ஓரே பூந்தோட்டமாக காட்சியளித்த பங்களாவை அவன் அதற்கு முன் கண்டதில்லை. வழி பூராவும் மணலாக இருந்தது. இரு பக்கமும் மல்லிகை, முல்லை கொடிகள் படர்ந்து கிடந்தன. இடையிடையே பலவித வர்ணச் செடிகள் அழகாகக் கத்தரித்து விடப்பட்டு இருந்தன. இந்த செடிகளுக்கிடையே அங்காங்கேவெள்ளை நிறப் பதுமைகள் அழகு செய்த வண்ணம் நின்று கொண்டிருந்தன. சுற்றுப்பக்கங்களில் காடு மாதிரி செடிகளும் மரங்களும் வளர்ந்திருந்தன. இந்த இயற்கையோடியைந்து வளர்ந்துகிடந்தவனப்பை ரசித்தபடியே வந்து கொண்டிருந்த ஆறுமுகம் எதிரே பிரமாண்டமான இரு வெண்ணிறத் தூண்களைப் பார்த்து திடுக்கிட்டு நின்றான்.

நெஞ்சு திக், திக்கென்று அடிக்க மெதுவாக தலையைத் தூக்கிப்பார்த்தான். அவன் கண்ட காட்சி அப்படியே அவனை சித்தப்பிரமையாக்கி விட்டது! ஐயோ! இவ்வளவு பெரிய மாளிகையிலா அவன் வேலைபார்க்கப் போகிறான்! நினைத்தாலே அவனுக்கு நெஞ்சம் திக் கென்றது.

அந்த நேரத்திலே அவன் சிந்தனையை கலைக்கும் குரலில் யாரோ கத்துவது கேட்டது

"இந்தாப்பா...யாரது? என்ன வேணும்? என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தான். அங்கே குப்பன் நின்று கொண்டிருந்தான்!

பல வருஷங்களுக்கு முன் ஆறுமுகத்தை வேலைக்கு எடுத்துக் கொள்ள மறுத்த அதே குப்பன் தான்!

அவனைக் கண்டதும் ஆறுமுகத்திற்கு வெறுப்புதான் முதலில் ஏற்பட்டது. "உன்னை தேடிக்கொண்டு வரலையடா..."என்று கூற ஆசை தோன்றியது. ஆனாலும் அவனுக்குத்தான் அஞ்சலை புத்தி கூறியிருக்கிறாளே!

வெறுப்பைக் காட்டிக் கொள்ளாமல் மெதுவாக "மானேஜர் ஐயாவைப் பார்க்கணும்' என்றான்.

குப்பன் கோபமடைந்தான்.

"என்னடாப்பா, மானேஜரிடம்..."

"மானேஜரைய்யாதான் வரச் சொன்னாரு..."

இந்தப் பதில் குப்பனுக்கு ஆச்சரியமாயிருந்தது. தான் ஆதிபத்யம் செலுத்திவரும் தோட்டவேலைக்கு— ஆறுமுகம் போட்டி போட வந்து விட்டானோ என்று பயந்தான்.

"மானேஜரா, வரச்சொன்னாரு... சரி இங்கேயே உட்கார்ந்திரு. இன்னும் அரைமணியில் இங்கு வருவார், அவரே!" என்று கூறிவிட்டு தோட்டத்திற்குள் போனான் குப்பன்.

ஆறுமுகம் அந்தப் பிரம்மாண்டமான மாளிகையைப் பார்த்து திகைத்தபடியே நின்று கொண்டிருந்தான்.

அந்த பங்களாவின் முன் வராந்தாவே ஆறுமுகம் இதுவரைபார்த்த வீடுகளைவிட மிக நீளமாகஇருந்தது. வராந்தாவின் வலது கோடியிலே மாடிக்குச் சுழன்று சென்றன படிக்கட்டுகள். அந்த மாடிப்படிகளின் கைப்பிடிகளில் பூசப்பட்டிருந்த கருப்பு வர்ணம் மினுமினுத்தது. வராந்தாவின் தளவரிசையோ கண்ணாடிபோலப்பளபளவென்று அவன் உருவத்தையேகாண்பித்தது.

ஆவலோடும், பயத்தோடும்வராந்தாவில் ஏறினான். வழுவழுவென்று இருந்த சலவைக்கற்கள் அவன்கால்களுக்குக் கூச்சத்தையே உண்டாக்கின. வராந்தாவின் நடுவில் முன் வாயிற்படி இருந்தது. அந்த நிலைக் கதவுகளுக்கு செய்யப்பட்டிருந்த வேலைப்பாடுகளைவிட அந்த வாயிலை மூடிக் கொண்டு லேசாகக் காற்றில் அசைந்தாடிய மெல்லிய பச்சைத் துணி இருக்கிறதே, அது ஆறுமுகத்தை இன்னும் கவர்ந்தது.

வாயிற்படிக்குப் பக்கத்திலே ஒரு ஆள் உயரத்திற்கு ஒரு கண்ணாடி வைக்கப்பட்டிருந்தது. அதன் பக்கத்திலே ஒரு ஸ்டாண்ட் நிறுத்தப்பட்டிருந்தது. இவைகள் எதற்கு என்று ஆறுமுகத்திற்குப் புரியவேயில்லை.

இவ்வளவு பெரிய கண்ணாடி இந்த வாயிலிலே ஏன் (?) என்றஎண்ணத்தோடே அதனருகில் சென்று நின்றான்.

ஐயோ...! அவனுக்கே அவன் உருவத்தைப் பார்க்க வெட்கமாக இருந்தது.

தலையெல்லாம் பரட்டை. கிழிந்த புஷ்கோட்—பொத்தல்கள் தெரியாத அளவு அழுக்காக இருந்தது. —வெள்ளை நிற வேட்டி அழுக்கேறிக் காவி நிறமாகக் காட்சி அளித்தது. இந்த மேல் மூடிகள் போக எஞ்சி நின்ற அவன முஞ்சியும், கைகால்களும் ஒரே கருப்பாகக் கரி வேஷம் போட்டமாதிரி இருந்தது.

தன் உடல் இப்படித்தானிருக்கிறது என்று ஆறுமுகத்தால் இதுவரை அறிந்துகொள்ள முடிந்ததில்லை. அன்று தான் உத்தமநாதபுரத்தில் வாழும் முனியன், காத்தான், கந்தன் முதலிய எல்லோரையும் போலத்தான்தானும் என்பதை தெரிந்து கொண்டான்.

இவ்வளவுக்கும் காலையிலே நன்றாக குளித்துமிருக்கிறான், ஆறுமுகம். இருந்தும் அவன் ஏன் அவலட்சணமாகத் தோன்றுகிறான்?

மறுபடியும் கண்ணாடியைப்பார்த்தான், ஆறுமுகம். அவன் முகத்தைப் பார்க்க அவனுக்கேஅருவருப்பாக இருந்தது. பயந்து திரும்பினான். அவன்முன்னால் நீண்டபூங்கா காட்சியளித்தது.

அவன் தாண்டிவந்த அலங்கார வாயிற்படி எங்கோகோடியில் தெரிந்தது,

நிமிர்ந்து பார்த்தான். ஒரே பசுமையாக நந்தவனம் பரந்துகிடந்தது. இடையிடையே மல்லிகையும், முல்லையும், சாமந்தியும், சூரியகாந்தியும், அந்திமந்தாரையும் வளர்ந்து நின்றன. அவன் நின்ற வராந்தாவிலிருந்து முன் கேட் வரை இருந்த தூரமே ஆறுமுகத்தை திகைக்க வைத்தது.

மெயின் ரோட்டிலிருந்து பார்த்தால் அவனுடைய உத்தமநாதபுரம் பரந்து கிடக்கும் தூரத்தைவிட அதிகமாகப் பரவி இருந்தது, அந்த பங்களாவின் முன் தோட்டம்!

"நாம் ஐந்நூறுக் கதிகமான குடிசை கட்டி வாழ்கிறோம்; இங்கே அந்த இடமே பூந்தோட்டமாகிறதே!" என்று நினைத்த போது ஆறுமுகத்தின் திகைப்பு பயமாகியது.

"இந்தச் 'சுவர்க்க' மாளிகையில் நாம் என்ன வேலை செய்யப் போகிறோம்? எங்கே இருந்து நமக்குத் தைரியம் கிடைக்கும்? என்றநினைவு ஆறுமுகத்திற்குத் தோன்றியது.

அந்த வேலையில் அவன் ஈடுபடும் முன்னமேயே, அவனை அதட்டியது ஒரு குரல்.

"யாருடாது...?"

திடுக்கிட்டுத் திரும்பினான், ஆறுமுகம். அங்கேமானேஜர்சாம்பசிவம் நின்று கொண்டிருந்தார்.

"நான்தானுங்க..." பதில் கூற ஆரம்பித்தான் ஆறுமுகம். ஆனால் வார்த்தைகள் வரவில்லை; முகம் வியர்த்தது. நாக்குவரண்டது. கால்கள் நடுங்கின. படபடவென்று இருதயம் அடித்துக் கொண்டது. அப்படியே விழித்தபடி நின்று விட்டான்!

அவனுடைய பயத்திற்கு மானேஜர் பொறுப்பாளியா என்ன?

"நான் தானுங்கண்ணு...நீ யாருடா?" என்று சப்தம் போட்டார்.

இந்தச்சப்தம் ஒருஉலுக்கு உலுக்கிற்று, ஆறுமுகத்தை.

"நான்தானுங்க..." என்று ஆரம்பித்தான், ஆறுமுகம், மறுபடியும்.

இதற்குள் தோட்டத்திலிருந்து ஓடிவந்த குப்பன், "மாரி மகனுங்க, சாமி!" என்று முடித்தான்.

நன்றியோடு குப்பனைப் பார்த்தான் ஆறுமுகம். சரியான சமயத்தில் குப்பன் தன்னைக் காப்பாற்றிவிட்டதாக அவன் நினைப்பு.

"ஓ...! நீதான்மாரிமகனா. நேற்று அஞ்சலை சொல்லிப் போனது உன்னைத் தானே?"

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின், மேலும் சந்தா முடியும்தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒருவாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.

இதற்குள் ஆறுமுகம் தயாராகி விட்டான். "ஆமாங்க நான் தான் மாரிமகனுங்க... ஆறுமுகம்" என்று மெதுவாகப் பதில் கூறினான்.

மானேஜர் அடுத்த வார்த்தையே ஆறுமுகத்தின் வேலையைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார்.

"எத்தனை நாளா கார் ஓட்டிகிட்டு இருக்கேடா?"

"ஒரு வருஷமாங்க..."

"இதுக்கு முன்னே எங்கே ஓட்டிகிட்டு இருந்தே?"

"அதாங்க சொல்ல வந்தேன்; இதுவரைக்கும் ஒரு ரிப்பேர் ஷாப்பிலே தானிருந்தேனுங்க. இப்பதான் பிரைவேட் கார் டிரைவரா வர்ரேனுங்க"

"அப்படியா...ஹூம்... அதுவும் சரிதான். கார் ரிப்பேரைப் பற்றியும் தெரிந்திருந்தால் நல்லதுதான்!" என்று கூறிவிட்டு அவனையே சில நிமிடங்கள் பார்த்துக் கொண்டிருந்தார். பின், "இங்கே, நீ பார்க்க வேண்டிய வேலை என்ன தெரியுமா? முதலாளியின் குடும்பக் காருக்கு நீதான் டிரைவர்!" என்றார்.

"சரி, சார்!" என்று அவனையுமறியாமலே "சார்!" என்று கார் ஷெட்டிலே அவன் கேட்ட வார்த்தையை உபயோகப்படுத்தினான். மானேஜரும் அந்த வார்த்தைக்கு ஆட்சேபனை எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

அவர் மேலும் பேச ஆரம்பித்தார். "முதலாளிமார்களுக்குக் கார் ஓட்டுவதற்கு திறமை வேண்டும் முதலில் நீ கற்றுக்கொள்ள வேண்டியது, காரிலே யார் போனாலும், யார் வந்தாலும் எங்கே போனார்கள் எங்கே வந்தார்கள் என்பதை உன் வாயைத் திறந்து பேசக்கூடாது.

காரிலேபோகும்போது முதலாளிமார்கள் என்ன செய்கிறார்கள், எதைப்பற்றிப் பேசுகிறார்கள் என்றெல்லாம் கவனிக்கக்கூடாது. தப்பித்தவறி காதில் விழுந்தாலும் கேளாக் காதனாக நடந்துகொள்ள வேண்டும்.

இன்னும் இதைக்கூட ஞாபகத்தில் வைத்துக்கொள். எங்காவது கார் போய் நின்றால், முதலில் நீ இறங்கி முதலாளிகளுக்கு கார் கதவைத் திறந்து விடவேண்டும். இல்லை—அவர்கள் உள்ளேயே உட்கார்ந்து பேசினால் நீ வெளியே நின்றுகொண்டிருக்க வேண்டும். ஆமாம்! கார் ஓட்டும் நேரம் மாத்திரம்தான் நீ காரில் உட்காரலாம்! என்ன நான் சொல்வதெல்லாம் புரியுதா?"

மானேஜரின் சிறிய சொற்பொழிவைப்பிளந்த வாயோடு கேட்டுக்கொண்டிருந்த ஆறுமுகம் "சரிதான் சார்! கவனமா நடந்துகிறேனுங்க!" என்று அவசரமாகக் கூறினான்.

மானேஜர் அவனுடைய பதிலில் திருப்தி அடைந்தார் என்றுதான் கூறவேண்டும். இல்லையேல் "சரி இதோ இந்த அறையிலே டிரைவர் போட்டுக் கொள்ள வேண்டிய டிரஸ் இருக்கிறது. அதை எடுத்துப் போட்டுக்கோ. ஷெட் சாவி இந்த ஆணியிலே மாட்டியிருக்கு. போய் ஷெட்டுக் கதவைத் திறந்துகாரைப் பாரு."

"சரிங்க......" என்று சொல்லிவிட்டுத் திரும்பினான் ஆறுமுகம்.

இதற்குள் மானேஜர் மறுபடியும் பேசஆரம்பித்தார்.

"உனக்கு உள்ள வேலையைச் சொல்லலையே; அதை மறந்து விட்டேன். இதோ பார், ஆறுமுகம். இப்பொழுது உன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கார் மூன்று பேருக்குத்தான் பயன்படுத்தப்பட வேண்டும். முதலாளி, அவர்பிள்ளை, பெண் மூன்று பேருக்காகத்தான் அந்த கார் — அதற்கு டிரைவர் எல்லாம்!

சரியா 9-30மணிக்குத்தம்பி வருவாங்க. அவுங்களை காலேஜிற்கு கொண்டுபோய் விட்டு விட்டு வந்தின்னா, அதற்குள் புஷ்பா அம்மா தயாராகிவிடுவாங்க: உடனே அவுங்களை அழைத்துகிட்டுப் போய் காலேஜிலே விட்டுவிட்டு வரணும். பிறகு முதலாளி கூப்பிட்டால் போகணும். இல்லாவிட்டால் மாலை நாலு மணிக்குப் போய் முதலில் தம்பியை அழைத்துக் கொண்டு வரணும். பின் போய் அம்மாவை அழைத்துக் கொண்டு வரணும். இதைத்தவிர எந்த நேரமும் எத்தனை மைலும் காரோட்டத் தயாராயிருக்கணும். தெரிந்ததா?"

மானேஜர் கூறியது அவ்வளவையும் ஞாபகத்தில் கொண்டுவரமுடியவில்லை, ஆறுமுகத்தால்.

இருந்தாலும் "தெரிந்தது" என்று தலையை ஆட்டினான்.

"சரி, போ. இன்றையிலிருந்தே உனக்குச் சம்பளம் போடப்படும். மாதசம்பளம் 40 ரூபாய் என்று கூறிவிட்டு உள்ளே போய்விட்டார் மானேஜர். (தொடரும்)

வரப்பெற்றோம்

ஆச்சார்யா

[ஆசிரியர், பூங்கோதை]

தி. மு. க. முன்னணித் தோழியரான பூங்கோதை தீட்டிய மேற்படி நூல், சிந்தனைக்கு விருந்தளிக்கும் வகையில் அமைந்திருக்கிறது. தமிழ் துள்ளி விளையாடும் இந்த நூல், ஆராய்ச்சியின் அடிப்படையில்கிடைத்தபல சம்பவங்களைத் தெரிவித்துச் செல்லுகிறது. அனைவருக்கும் சுவையூட்டக்கூடிய நூல்.

விலை 1-8-0.

திருச்சி மன்றம்,
தெப்பக்குளம், திருச்சி.

ஆடும் ஆச்சாரியார்

தோழர் இளமுருகு பொருட்செல்வி தீட்டிய இந்நூலில் ஆச்சாரியாரின் போக்குகள் பற்றி, தீட்டப்பட்டிருக்கிறது.

விலை 0-8-0

நம் நாட்டுப் பண்ணை,
மணப்பாறை, திருச்சி.

ரஷ்யன் கண்ட திராவிடம்.

தோழர் கலைமதி தீட்டிய இந்நூலில் நமது முழக்கம் கேட்கிறது-புதிய முறையில்.

விலை 0-6-0

புரட்சிப் பண்ணை,
தெற்கு வெளிவீதி மதுரை.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press.
25, Tirukkachinambi St., Kancheepuram.